ஆடி - 2021

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

ஆடி - 2021

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப : R.Mahendran,
34 Redriffe Road, Plaistow,
London, e13 0JX, UK

மின்னஞ்சல் : neythal34@gmail.com
mahendran54@hotmail.com

காசோலைகள் : R.Mahendran எனும் பெயருக்கு எழுதுங்கள்.

நன்றி : இணையம்


## வணக்கம்,

காற்றுவெளியின் ஆடி மாத இதழ் தங்களின் பார்வைக்கு வருகிறது.

ஒவ்வொரு இதழும் முடிந்தவரை வாசகர்களின் மின்னஞ்சல்களுக்கு அனுப்பப்படுகிறது. காற்றுவெளி சிற்றிதழ்களின் மீதான கரிசனையே சிற்றிதழ் சிறப்பிதழ்களைக்கொண்டு வந்தது.முழுமையான கட்டுரைகள் கிடைக்காமையினால் தொகுப்பாக அச்சில் கொண்டுவரமுடியவில்லை.ஒவ்வொருவரும் தங்களது இதழ்களை முன்னிறுத்தவே விரும்புகிறார்கள்.அதனைத்தவிர்த்து சக சிற்றிதழ்களின் மீதான அபிமானத்துடன் கட்டுரை தருமாறு எதிர்ப்பார்க்கிறோம்.

சிற்றிதழ்களின் சிரமங்கள் தெரிந்ததே.சிற்றிதழ்களை வளர்த்தெடுத்த சிற்றிதழாளர்களையும் நினைவுபடுத்துவோம்.

காற்றுவெளியின் வளர்ச்சியில் பங்குபெற விரும்புவோர் தொடர்புகொள்ளலாம். எதிர்காலத்தில் படைப்பாளர்களே படைப்புக்களைத் தொகுக்கும் வண்ணம் இதழை வடிவமைக்கவும் திட்டமுள்ளது.

மேலும், காற்றுவெளி தொடர்ந்துவர ஒத்துழைக்கும் படைப்பாளர்களுக்கு நன்றி. காலம் ஒத்துழைப்பின் ஆவணி சிற்றிதழை அச்சில் கொண்டுவரலாம். நோய் அச்சுறுத்தலின் தீவிரம் குறையவும் பிரார்த்திப்போம்.

நட்புடன்,

சோபா.

# பெருமாள் முருகனின் சிலநாவல்கள் - அறிமுகமும் நயப்பும்




எனக்குப் பிடித்த நாவலாசிரியர்கள் என்ற வட்டத்துக்கு வெளியே, நான் இரசித்து வாசித்தவற்றுள் பெருமாள் முருகனின் நாவல்கள் குறிப்பிடத்தக்கவை. முதன்முதல் இவரது 'பூக்குழி' என்கின்ற நாவல் எதேச்சையாக வாசிக்கக் கிடைத்தது. சிறந்த ஒரு வாசிப்பனுபவத்தைத் தந்து 'பூக்குழி' என்னையும் தனக்குள் ஈர்த்துக்கொண்டது.

செல்வச் செழிப்பில் வாழாவிடினும், தன்னளவில் மகிழ்ச்சியாக வாழ்ந்த இளம்பெண் ஒருத்தி, தான் காதலித்தவனோடு தனியாகப் புறப்பட்டு அவனது ஊருக்கு வருகிறாள்.

சாதித்திமிர் பிடித்த அந்தக் கிராமம் அவளது மாமியார் தலைமையில் அவளை எரித்துக் கொல்கிறது. இதுதான் பூக்குழி. உயிருக்குப் பயந்து பற்றைகளுக்கு நடுவில் ஒளிந்து கொள்பவள் தப்பித்து விடாமற் சூழ மூட்டப்படுகிறது தீ! அவளது மரணபயம், வேதனை, பதைபதைப்பை வாசகர்களும் உணரும் இந்த இடம் சாதிக் கொடுமையையும் இதேபோற் தீமூட்டி எரிக்க வேண்டும் என்ற கோபத்தை ஏற்படுத்துகின்றது. சாதிக்கொடுமையையும் ஆணவக்கொலையையும் சித்திரிக்கும் பல புனைவுகளை வாசித்திருந்தாலும் இந்தநாவல், பெருமாள்முருகனே சொல்வது போல "வாழ்வை நினைத்தாலே பகீர் என்கிறதே ஏன் இப்படி ஆக்கிக் கொண்டோம்" என்ற இயலாமை உணர்வுதான் எழுகிறது.

இந்த நாவல்தான் பெருமாள் முருகனின் எழுத்துகளைத் தேடி வாசிக்க வேண்டுமென்ற ஆவலைத் தூண்டியது. அந்தத் தேடலிற் சுகித்தவைதான் அவரது 'கங்கணம்', 'மாதொருபாகன்', 'ஆலவாயன்','கூளமாதாரி' ஆகிய நாவல்கள்.

இந்த நாவல்கள் யாவுமே பல பொதுவான பண்புகளைக் கொண்டிருக்கின்றன. காடும் சிறுமலைகளும் சார்ந்த மேட்டுத்தரை ஊர்களே நாவல்களின் களம். இதில் உலாவும் கதாபாத்திரங்களோ நம்மால் கற்பனை செய்ய முடியாதளவு பின்தங்கியவர்கள். அத்தனை ஆண்களும் கோவணதாரிகள்.விசேட நாட்களில் மட்டும் ஒரு துண்டைச் சுற்றிக்கொள்வார்கள். கால்நடைகள் குறிப்பாக ஆடு மேய்ப்பதும் சிறுதானியங்கள், மரக்கறிச்செய்கையும் மட்டுமே அவர்களின் பிரதான தொழில்கள். ஆடு, மாடு, நிலம் இவற்றுக்கு உரிமையாளர்களான சிறுபண்ணையாளர்கள், இவர்களையே நம்பி வாழும் 'ஆள்க்காரர்' என்றழைக்கப்பட்ட கூலிகள் என இரண்டு தரப்புக்குள்ளேயே இதில் வரும் கதைமாந்தர்கள் அனைவரும் அடக்கம். இத்தகைய நாகரீகத்தின் சுவடுபடாத, பின்தங்கிய மக்களைக்கொண்ட கிராமங்கள் இன்றும் இருக்கின்றனவா? இருந்தால் வியப்பே.

ஆனால் எத்தனை பின்தங்கிய கிராமியமக்களாக இருக்கட்டுமே, அவர்களை வைத்து நாவலாசிரியர் கதை சொல்லும் பாங்கு அற்புதம். பரிச்சயமே இல்லாத பல கிராமிய வழக்குகள் நாவல்களில் அடிக்கடி பிரயோகிக்கப்படுகின்றன. எனினும் பிசிறற்ற, தெளிவான நடை வாசகரை ஈர்த்து கதையோடு ஒன்றச்செய்து விடுகிறது. எந்த இடத்திலும் சலிப்பைத்தராத விறுவிறுப்பும், வியக்க வைக்கும் பாத்திரப் படைப்பும் வாசகரை பிரமிக்கச் செய்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

'கங்கணம்' நாவல் ஒரு வித்தியாசமான கருவின் அடித்தளத்தில் விரிந்துள்ளது. "திருமணத்துயரில், ஆணின் மனநிலையைப்பேசும் நாவலாக இது உருவாயிற்று. இதன் ஒவ்வொரு பகுதியை எழுதும் போதும் மிகுந்த ரசனையோடும் அனுபவித்தும் எழுதினேன்" என்கிறார், நாவலாசிரியர். வாசிக்கும்போது அந்த ரசனையும், அனுபவமும் நமக்குள்ளும் கடத்தப்படுகிறது.

'மாதொருபாகன்' 'ஆலவாயன்' இரண்டும் தொடராக அமைகின்றன. 'மாதொருபாகன்'

நாவல் என்னை மிகவும் ஈர்த்தது. ஒரு பூவரசு மரத்தோடு ஆரம்பித்து, அதே பூவரசோடு கதை முடிகிறது. ஒரு குழந்தைக்காகத் தவித்துக் கிடக்கும் தம்பதி, ஊர் வழக்குக்கேற்ப அதைப் பெறமுயல்கிறாள் மனைவி. இதனை ஏற்றுக்கொள்ள முடியாமல் தான் ஆசையாக வளர்த்துவிட்ட அதே பூவரசில் வாழ்வை முடித்துக்கொள்கிறான் கணவன் இதுதான் 'மாதொருபாகன்' இந்த நாவலின் முன்னுரையில் "இதை எழுதிய காலத்தில் அற்புதமான பாத்திரங்களையும் அருமையான சம்பவங்களையும் சிருஷ்டித்துவிட்ட மமதை எப்படியோ எனக்குள் உருவாகி-யிருந்தது" என்கிறார் நாவலாசிரயர். இதை எந்த வாசகராலும் மறுக்கமுடியாது.

பெருமாள் முருகனின் நாவல்களில் "கூளமாதாரி" மிகவும் அருமையானது. பண்ணையார்களிடம் ஆடு மேய்க்கும் ஏழை'ஆள்க்கார'ச் சிறுவர்களின் கதை. நாவலாசிரியரே அப்படி ஒரு வாழ்க்கை வாழ்ந்திருப்பாரோ என சந்தேகிக்க வைக்கிறது, பாத்திரங்களின் வார்ப்பு. "கூளமாதாரி போல என மனதுக்கு நெருக்கமான நாவல் வேறில்லை. இந்நாவலின் களமும் பாத்திரங்களும் மங்காமல் புகைபடியாமல் அழியாச் சித்திரமாய் என் நெஞ்சில்வாழ்கின்றன." என்னும் நாவலாசிரியரின்

கூற்றே இதற்குச் சான்று. ஒருமுறையல்ல, பலமுறை வாசித்து மகிழக்கூடியவை

பெருமாள் முருகனின் நாவல்கள்.



# இருள் விலகிய இதயங்களின் கண்ணீர்

குளிக்க போவதற்கு முன்பு அலுமாரியிலிருந்த இளம் மஞ்சல் சுடிதாரை எடுத்து கட்டிலின் மேல் வைத்து அதற்குரிய 'சோல்ட்"டையும் எடுத்து வைத்த பின்னர் குளியலறைக்கு சென்றேன்.

சென்றகிழமை பல ஆண்டுகளுக்கு பின்னர் என்னுடன் பல்கலைக்கழகத்தில் படித்த டயானாவை சந்தித்தேன். மாலை நேரம் பஸ்சிற்காக காத்திருந்தபோது எதேச்சையாக இருவரும் சந்தித்துக்கொண்டோம்.

ஏறக்குறைய நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் இருவரும் சந்தித்தோம். எப்படியடி கீர்த்தனா சுகமாக இருக்கிறாயா? இப்போ என்னடி செய்கிறாய் என்று என்னை கேட்டாள். தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்வதாக கூறிய நான் டயானாவை பார்த்து இப்போ நீ என்னடி செய்கிறாய் என்று கேட்டபோது அவள் தனியார் வங்கியொன்றில் வேலை செய்வதாகவும், தனியார் வங்கியென்பதால் எப்போது வேலை முடியும் என்பதை குறிப்பிட்டு சொல்ல முடியாது. அதுவும் சனிக்கிழமையென்றால் அந்தக் கிழமை செய்து முடிக்க வேண்டிய வேலை அத்தனையும் முடித்து மனேஜருக்கு அனுப்பி விட்டு புறப்பட ஏழுமணியாகும். நேரத்தை பார்க்காமல் வேலை செய்தாலும் பறவாயில்லை ஆறு மாதத்திற்கு ஒருக்கா 'போனஸ்" தருவார்கள். அம்மா, அப்பாவிற்காக வேலையை நேரம் பார்க்காமல் செய்ய வேண்டிய நிலை எனக்கு என்று கூறியவள் எனது அப்பா, அம்மாவை பற்றி விசாரித்தாள்.

அப்பாவை பற்றி கேட்டதும் எனது கண்கள் கலங்கியது.

என் கண்கள் கலங்கியதை பார்த்த டயானா ஏனடி கண்களில் கண்ணீர்? உன்னை பார்த்தபோதே உற்சாகமிழந்த நிலையில் ஒருவித சோகத்துடன் தான் நின்றாய். இப்போ உன் குடும்பத்தை கேட்டதும் உன் கண்களில் கண்ணீர். எதுவாக இருந்தாலும் எனக்கு சொல்லன்ரி என்றாள்.

அப்பாவிற்கு கொழும்பிற்கு வேலை மாற்றம் கிடைத்தது. அவர் அங்கு போகமல் இங்கு வேலை செய்த இடத்திலேயே வேலை செய்யவேண்டும் என்பதற்காக 'மினிஸ்ரி"யில் தெரிஞ்ச ஒருவரிடம் கதைப்பதற்காக கொழும்பிற்கு போனவர் திரும்பவும் இங்கேயே வேலை செய்வதற்கான அனுமதியை பெற்றுக்கொண்டு வரும் வழியில் வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையில் அவர் வந்த பஸ்சுடன் 'டிப்பர்" வாகனம் ஒன்று மோதியதால் அதில் பயணம் செய்த இருபது பேருக்கு மேல் கடுமையான காயங்கள் அதில் எனது அப்பாவும் தான். அவருக்கு கால் எலும்பு முறிந்து வவுனியா ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணியிருந்த செய்தி கேட்ட நானும், அம்மாவும் போய் பார்த்து அவரை உடனடியாக வாகனத்தில் இங்கே அழைத்து வந்து இங்குள்ள தனியார் வைத்தியசாலைக்கு அழைத்து சென்றோம்.

அப்பாவை பரிசோதித்த 'டொக்ரர்ஸ்" ஒப்பறேசன் செய்து காலுக்கு 'ஸ்ரீல்" வைக்க வேணும் என்றும், அதற்கு ஐஞ்சு லட்சம் செலவாகும் என்று சொன்னார்கள். பணத்தை ஒழுங்கு செய்ததும் ஒருமாதத்திற்குள் திரும்ப அழைத்து வரும்படி சொன்னவர்கள் தற்காலிகமாக காலை அசைக்க முடியாதபடி 'வன்ரேஜ்" போட்டார்கள். நான் வேலை செய்யும் நிறுவனத்தில் எனது நிலைமையை கூறி உதவி செய்ய முடியுமா? என்று கேட்டேன். அவர்கள் சிறிய தொகையென்றால் உதவி செய்யலாம். ஆனால் இது பெரிய தொகையாக இருப்பதால் எங்களுடைய 'ஹெட் ஒஃப்பிஸ்" இதற்கு சம்மதிக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள். சரி பார்ப்போமென்று இன்னொரு வங்கியில் கடன் கேட்டு போனேன். வீட்டு உறுதியிருந்தால் அல்லது யாராவது நல்ல வேலையிலிருப்பவர்கள் பிணை நின்றார்களென்றால் தருவதாக சொன்ன அவர்களின் பதிலால் என்ன செய்வது என்பது தெரியாமல் மனச்சோர்வுடன் நிக்கிறேன் என்று கூறி நிறுத்தினேன்.

நல்லவேளை கீர்த்தனா நீ என்னை சந்தித்தது நல்லதாக போச்சடி. உன்னுடைய 'டொக்கியூமென்ற்சையும், சலறி டீரெயில்சை"யும் என்னட்டை தாடி. நீ ஒன்றுக்கும் யோசிக்காதே நாளைக்கு என்னுடைய வங்கி எம்.டி.யோடு கதைக்கிறேன். பிணை கேட்டால் நான் கையெழுத்து வைக்கிறேன். நீ எதற்கும் திங்கட்கிழமை காலை வங்கிக்கு வா. நான் சனிக்கிழமை உனக்கு போன் பண்ணுறேன் என்று கூறியவள் என்னிடம் செல்பேசி நம்பரை

வேண்டிக்கொண்டு அவள் போகவேண்டிய பஸ் வந்து தரிப்பிடத்தில் நின்றதால் என்னிடமிருந்து விடைபெற்றாள்.

சனிக்கிழமை மாலை டயானா சொன்னதுபோல் செல்பேசியில் அழைத்தவள் தான் எம்.டி.யோடு கதைத்ததாகவும் பத்து மணிக்கு சந்திப்பதற்கான 'அப்பொயின்மென்ற்" தந்திருக்கிறார். அவர் கட்டாயம் இந்த உதவியை செய்வார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கடி. நீ ஒன்றிற்கும் யோசிக்காதே பத்து மணிக்கு முன்பே வந்திடு என்று கூறியவள் தொடர்பை துண்டித்தாள். அவள் சொன்னதை கேட்ட என் மனசுக்குள் சிறு நம்பிக்கை தோன்றியது.

அவள் சொன்ன அந்த நம்பிக்கையோடு குளித்துவிட்டு வந்து அறையில் உடையை மாற்றிக்கொண்டு அம்மாவிடம் டயானா வரச்சொன்ன காரணத்தை கூறிவிட்டு வீதிக்கு வந்து எதிரில் வந்த ஆட்டோவை மறித்து எறிய நான் வங்கி வாசலில் வந்து இறங்கினேன்.

வங்கி வாசலில் இருந்த கனமான கண்ணாடி கதவை திறந்து கொண்டு தயக்கத்துடன் உள்ளே சென்றேன். உள்ளே நுழைந்த நான் டயானா எங்கிருக்கிறாள் என்று தேடியபோது என்னை பார்த்த டயானா எழுந்து வந்தாள்.

'இங்கே வாடி" என்றவள் தனது மேசைக்கு அழைத்து சென்று முன்னால் இருந்த இருக்கையில் அமரும்படி சொன்னாள். தனது இருக்கையில் அமர்ந்தபடி 'எட்டு மணிக்கு நான் எம்.டி. யிடம் நீ பத்து மணிக்கு வருவாயென நினைவூட்டினேன். 'லோண் அப்ளிக்கேசன்" படிவத்தை நிரப்பிக்கொண்டு தன்னை வந்து பார்க்கும்படி சொன்னவர்" என்று கூறியபடி அப்பிளிகேசன் படிவத்தை எடுத்து என்னிடம் தந்து நிரப்புமாறு சொன்னாள்.

அதில் கேட்டிருந்த விபரங்கள் அனைத்தையும் நிரப்பி கீழே கையெழுத்திட வேண்டிய இடத்தில் கையெழுத்து வைத்த பின்னர் அவளிடம் கொடுத்தேன். என்னை படிவத்தை வைத்திரடி, நான் போய் எம்.டி.யிடம் நீ வந்திருக்கிறாய் என்று கூறி இப்போ சந்திக்கலாமா? என்று கேட்டிட்டு வாறேன் என்;று சொல்லிக்கொண்டே எழுந்து போனாள்.

சில நிமிடங்களில் வந்த டயானா வாடி உன்னை வரச்சொன்னவரென்று என்னை எம்.டி-யிடம் அழைத்து சென்றாள். உள்ளே பிங்கலர் சேட்;;, சேட்டிற்குரிய பிங்கலர் கோடிட்ட ரை, கறுப்பு ஐறின்ஸ் அணிந்தபடி காதோரங்களில் நரை விழுந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க நல்ல 'காண்ட்சம்"மானவரிடம் அறிமுகம் செய்துவிட்டு வெளியே போனாள்.

தயக்கத்துடன் அவர் முன்னே நின்று வணக்கம் கூறிய என்னை பார்த்து சிரித்த முகத்துடன் மேசையின் முன்னாலிருந்த இருக்கையில் அமரும்படி கையை காட்டினார்.

இருக்கையில் அமர்ந்ததும் மேசையில் என்னுடைய 'டொக்கியூமென்ற்ஸ்" இருப்பதை பார்த்தபடி கையில் நிரப்பி வைத்திருந்த விண்ணப்ப படிவத்தை கொடுத்தேன். அதை வேண்டி பார்த்தவர் 'உங்களுடைய பெயர் கிருத்திகா சந்திரமோகன். அம்மாவின் பெயர் நிரஞ்சனாதேவி. கடந்த ஒரு வருடமாக தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்வதாகவும் இன்னும் நிரந்தரமாகவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறீங்கள். அப்படியிருக்கும்போது ஐந்து லட்சம் கடன் தொகையாக கேட்டிருக்கிறீங்கள். எதற்காக இந்த கடன் தொகையென்று குறிப்பிடவேண்டிய இடத்தில் வைத்திய செலவிற்கு என்று குறிப்பிட்டிருக்கிறீங்கள். வைத்திய செலவிற்கென்று வங்கியில் கடன் கொடுப்பதில்லை."

'அப்படி வேறு ஏதாவது காரணத்திற்காக கடன் கொடுப்பதாக இருந்தாலும் யாராவது ஒரு

நல்ல வேலையில் இருப்பவர் பிணையாக கையெடுத்திட வேண்டும். அப்படி ஒருவருடைய பெயரையும் இங்கு குறிப்பிடவில்லை."

இருக்கையின் நுனியில் அவஸ்த்தையோடு இருந்த எனக்கு அவர் கூறியதை கேட்டதும் 'அப்பாவின் ஒப்பறேசனுக்காகத் தான் இந்த கடனை கேட்கிறேன். டயானா எல்லா விசயத்தையும் உங்களிடம் சொல்லியிருப்பாள் என்ற நம்க்கையோடு வந்தனான். தேவையென்றால் டயானா தான் கையொப்பமிடுவதாக என்னிடம் கூறினார்."

'உங்களுடைய நிலைமை எனக்கு புரிகிறது. எதற்கும் டயானாவோடு கதைத்துவிட்டு இரண்டு நாட்களுக்குள் எங்கள் பதிலை உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்."

அவரின் பதிலை கேட்ட எனக்குள் கடன் கிடைக்குமா?.. கிடைக்காதா?.. என்ற ஏக்கத்ததோடு கண்களில் துளிர்த்த கண்ணீரை சோல்டால் துடைத்தபடி 'போயிற்று வாறேன் சேர்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து வெளியே வந்து டயானாவிடம் நடந்ததை கூறினேன்.

அவள் என்னை எதற்கும் யோசிக்காதே அப்படி அவர் கேட்டால் கையெழுத்து வைக்கிறேன் என்று ஆறுதல் சொன்னவளிடமிருந்து விடைபெற்றேன். எனக்குள் இருந்த கொஞ்ச நம்பிக்கையும் வீணாகி விட்டால் இனியென்ன செய்வது என்ற யோசனையுடன் அந்த கட்டிடத்தை விட்டு வெளியில் வந்தபோது சுட்டெரிக்கும் வெய்யிலாக இருந்தது.

வங்கிக்கு அருகில் நின்ற ஆட்டோ ஒன்றில் ஏறி வீடு வந்து சேர்ந்தபோது வாசலில் கார் ஒன்று நிற்பதை பார்த்த எனக்கு ஆச்சரியாமாக இருந்தது.

எங்கள் வீட்டிற்கு வந்திருப்பது யாராக இருக்கலாம்? என்று மனசுக்குள் தோன்றிய கேள்வியோடு ஆட்டோவிற்குரிய பணத்தை கொடுத்துவிட்டு வெளிவாசலில் நின்று உள்ளே எட்டிப்பார்த்தேன்.

மனதுக்குள் அதிர்ச்சியாக இருந்தது!

வங்கியின் எம். டி.யும், அவர் அருகில் மனைவியுடன், அழகும், அடக்கமும் நிறைந்த வாலிபன் ஒருவனும் இருந்தானர். அம்மாவுக்கு அருகில் அப்பாவும் இருந்தார். அம்மா அழுது கொண்டே இருந்தாள்.

அழாதே நிரஞ்சனா.

'இருபத்;திநான்கு வருசத்திற்கு முன் பெற்றவர்களையும், உடன் பிறந்த என்னையும் வேண்டாமென்று நீ விரும்பிய வாழ்கையை தேடினாய். உன்மேல் உயிரையே வைச்சிருந்த அம்மா நீ போன ஏக்கத்திலேயே ஆறு மாதத்திற்குள் போய்ச்சேர்ந்தா. அம்மா போன கவலையால் அப்பாவும் ஒரு வருடத்தால் என்னை தனியா தவிக்கவிட்டுட்டு போனார். அதிலிருந்து மெல்ல, மெல்ல என்னை தேற்றிக்கொண்டு அப்பாவின் வங்கியை நிர்வகிக்க தொடங்கினேன். அன்று நீ ஒருவரும் வேணாமென்று போனதால் ஏற்பட்ட கோபத்தால் தான் இவ்வளவு காலமும் உன்னை தேடாமலிருந்தேன்".

'அண்ணா உங்களுடைய கோபம் நியாயமானது தான்! அதை ஒத்துகொள்கிறன். என் மனசுக்கு பிடிச்ச ஒருவருடன் வாழ்கையை ஆரம்பிச்சன். அன்றிலிருந்து இன்றுவரை என்னை கண் கலங்காமல் வைச்சிருக்கிறார். நான் சந்தோசமாகத் தான் வாழுறன்."

‘நீ சந்தோசமாக வாழுறாய் என்றுதான் இதுவரை காலமும் நினைச்சிருந்தனான். ஆனால் உன்ரை மகள் கிருத்திகா இன்று வங்கிக்கு கடன் கேட்டு வந்தபோது அவள் குறிப்பிட்டிருந்த விபரங்களை பார்த்ததால் வந்தவள் என்னுடைய மருமகள் என்பதை புரிந்து அவளுக்கு நான் யாரென்பதை காட்டிக்கொள்ளாமல் நீ ஏதோ கஸ்ரத்தில்; இருக்கிறாய் என்று நினைச்சு உடனே வெளிக்கிட்டு வந்தனான்.”

‘அண்ணனென்று நான் ஒருத்தன் இருக்கும்போது என்னுடைய தங்கச்சி நீ கஸ்ரப்பட வேணுமா?

இந்தா என்னுடைய மருமகள் வந்து என்னிடம் கேட்ட கடன் ஐஞ்சு லட்சம் இருக்கு. அவள் மனம் எமாந்திடக் கூடாது என்பதால் அவளுக்கு கொண்டு வந்த பணம். இது கடன் இல்லை அவளுக்கு நான் கொடுக்கும் அன்பளிப்பு” என்று சொல்லி அம்மாவின் கையில் கொடுப்பதை பார்த்தேன்.

அதுமட்டுமல்ல! ஏதோ ஓர் பத்திரத்தை எடுத்து இது அப்பா உனது பெயரில் எழுதி வைத்த எங்கள் வீட்டின் உறுதி என்று கொடுத்தவர், உனது பதினெட்டு வயதிலிருந்து உனக்கு சேரவேண்டிய வங்கியின் பத்து விகித பங்குக்குரிய செக் ஐம்பது லட்சத்து ஐம்பதாயிரம் என்று கூறி அம்மாவிடம் கொடுத்தார். அருகிலிருந்த அவர் மனைவியிடமிருந்த சிறிய பெட்டியை வாங்கி இதிலிருப்பது அம்மாவின் நகைகளும், நீ எங்களோடு இருக்கும்போது நீ பாவித்த நகைகளும் இருக்கு என்று கூறி அம்மாவிடம் பெட்டியை கொடுத்தார்.

திரும்பி அப்பாவை பார்த்து இன்றைக்கே உங்களுக்கு ‘நொதேர்ண் ஹொஸ்பிற்ற”லுக்கு அட்மிசன் எடுக்கிறேன். ஆனால் செலவு முழுவதும் நான் செய்;வேன் என்றார்.

அனைவரும் சந்தோசமாக இருந்த நேரத்தில் அம்மாவுக்குள் இப்படியொரு கதையிருக்கா? எனக்கு இன்றுவரை இதை சொல்லவேயில்லையே என்று நினைத்தபடி உள்ளே சென்றேன்.

என்னை பார்த்த அங்கிள் வாம்மா கிருத்திகா. இனி வங்கிக்கு கடன் கேட்டு வரத்தேவை-யில்லை. நீ கேட்ட பணத்தை உன் அம்மாவிடம் கொடுத்து விட்டேன் என்று கூறி சிரித்தவர் அம்மாவை பார்த்து உன்னுடைய மகளை என் மகனுக்கே தந்துவிடேன் என்று கேட்டதும் என்னை வெட்கம் பிடுங்கி தின்றது.

மோகனுக்கு கால் சுகமானதும் ஆறுமாதத்தால் கலியாணத்தை செய்யலாம் என்றவர் அப்பாவின் முகத்தை பார்த்தார். அப்பாவும் சரியென்று தலையாட்டியதும் அங்கிள் என்று கூறியபடி அவரருகில் சென்றேன். அவர் ஆதரவோடு என்னை அணைத்தபடி பிரிந்திருந்த எங்களை இன்று சேர்த்தது டயானா தான். டயானா உன்னை வங்கிக்கு வரவைத்திருக்காவிட்டால் இன்று உறவுகள் நாங்கள் இணையவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. அந்த நன்றியை அவளுக்கு தெரிவப்பதற்காக உனது திருமணத்தன்று அவளை ‘அசிஸ்ரன் மனேஜராக புறமோட்” பண்ணலாம் என்று நினைத்திருக்கிறேன். அதுவரை அவளிடம் இதைப்பற்றி என்னை சொல்லக் கூடாதென்று ‘கண்டிச”னும் போட்டார்.

இத்தனை வருடங்களாக உறவுகள் பிரிந்திருந்து சோகத்தால் தவித்திருந்த இதயங்களில் இருள் விலகிய நிலையில் பாசப்பிறவிகளின் உணர்வுக்குள் ஒளிந்து கிடந்த கன்னங்கள் அறியாத கண்ணீர்த்துளிகளின் ஈரம் உலராத நெஞ்சங்கள் இன்று சந்தோசத்தில் திளைத்துக்கிடந்தன.

தங்கேஸ்

# பறவையின் சாம்பல்



இந்தக் கவிதையை நீ எரிக்கும் நன்னாளில்
சிதையிலிருந்து எழும் சாம்பல் நிறப்புகை
பறவையாய் மாறி சென்று கொண்டிருக்கும்

ஒரு வில்வ மரத்தின் கூட்டிற்குள்
குருவிக்குஞ்சு வாய்திறந்தபடி
வரும் இரைக்காக காத்திருக்கும்

இருட்டு சந்துகளில்
உலகின் புராதான தொழில்
கொடிகட்டி பறந்து கொண்டிருக்கும்

கைபேசியில் படம் எடுத்து சீரழித்தவன்
சிரித்தபடி பத்திரிகைகளுக்கு
முகம் காட்டிக்கொண்டிருப்பான்

வழங்கப்படாத பொருட்களுக்கான
குருஞ்செய்தி பெற்றவன்
கைபேசியோடு
நியாய விலை கடை நோக்கி
படையெடுத்துக்கொண்டிருப்பான்

விசம் குடித்த சாக்ரடீஸ்கள்
வீதிவழியே சிரித்தபடி நடந்து
போய்கொண்டிருப்பார்கள்

மிசல் பூக்கோ
அறிவு அதிகாரத்தை இணைக்கும்
விடுபட்ட சொல்லொன்றை
தேடி கொண்டிருப்பார்

எடிட்டர்களின் மேசையின் மீது
காலி தேநீர் கோப்பைகளின் அருகில்
தீய்ந்து போன பறவையின் சாம்பல்
பொட்டலமாய் கட்டி மடித்து
வைக்கப்பட்டிருக்கும்

கி.சரஸ்வதி



# காற்று வெளி காப்போம்

பூமியின் ரேகையாய்ப் புறப்படும் ஆறுகள்
எடுத்தே காட்டிடும் நாட்டின் சோதிடம்

வேண்டுதல் வேண்டி வீசிய துணிகள்,
என்றும் மட்கா நெகிழிமலைகள்,
இரவில் நடக்கும் பல வகைக் கூத்துகள்

தோல்த் தொழிற்சாலையின் வேதியியல்
கழிவுகள்
இது போதாதெனச் சாயத் தண்ணீர்

இத்தனை வீச்சமும் உயிர்வளி அடைக்க
மூச்சைப் பிடித்து முனகும் தென்றல்

சுரண்டிச் சுரண்டி விற்றது போக
ஆற்றுப்படுகையில் ஏது வெண்மணல்?

இன்னொரு ஊழி இங்கே வந்தால்
விட்டுச் செல்ல ஏது நற்சான்றுகள்?

இலுப்பைப் பூக்களும் தளவம் மலர்களும்
குலுங்கிச் சிரிக்கும்
மலைவளம் காப்போம்

ஒற்றைக் காலில் நெடுந்தவம் புரிந்து
உலகைக் காக்கும் மரங்களே தெய்வம்

புற ஊதாக்கதிர் சுட்டு விடாமல்
வடிகட்டித் தரும் அந்த ஓசோன் வேண்டும்

உயிர்கள் இன்று தேடித் திரியும்
தூய உயிர்வளி யாவர்க்கும் கிடைக்க,

கொடுந்தீ நுண்மி சுழன்று பரவி
மண்ணுயிர் அழித்துப் புதைக்காதிருக்க,

மாமழை பெய்து நற் பூமியில் சேர்ந்து
நலமும் வளமும் ஓங்கித் திகழ,

நித்தம் முயன்று நம் சூழல் காப்போம்
ஒரு துளித் துரோகமும் இயற்கைக்குச்
செய்யோம்

கவிஞர். தக்ஷன், தஞ்சை

# மனக்குதிரை

நோய் குடுவைக்குள் மௌனத்தை
இட்டு நிரப்பிடும் மனக்குதிரை
புறவாசல் லாயத்தில் நின்றபடி
குளம்புகள் அசைய
வெற்றிடம் நோக்கி அலறுகிறது

அசரீரி சிதறும் மருத்துவ குரல்
உச்சரிக்கும் "சார் உங்க ரிசல்ட்.."
எனும் சொல்லில்
பயணக் களைப்போடு தள்ளுகிறது
பாசிட்டிவா நெகட்டிவா எனும்
நுரை எச்சில்

❍

**ச. இராஜ்குமார்**

உன்னை எண்ணி கவிதை எழுத
நினைத்தால்
நேரமே போதவில்லை..
நேரம் கிடைத்தால் கவிதை வர
மறுக்கிறது..
சொற்கள் எல்லாம் போட்டி
போடுகிறது
உன் பெயரை எழுதிட..
நித்திரையில் உன்னை கண்டேன்
சொப்பனத்தில் எழுதி வைத்தேன்
உனக்கான கவிதையை யாரும்
அறியாத வண்ணம்..!!!

முனைவர்.சா.சம்பத்
மன்னார்குடி

# ஹைக்கூ

அடகு வைக்க
முடியவில்லை..
அம்மாவின் காதில்
விளக்குமாறு குச்சி..!

❍

இரகசியங்களை
கேட்கிறது செல்பேசி..
வெளியே யாரிடமும்
சொல்வதில்லை..!

❍

வேடம் கலைந்தது..
அழத் துவங்கினான்
சிரிப்பு கலைஞன்..!

❍

வறுமையைக்
கழுவ வேண்டும்..
குளிக்கிறான் வியர்வை
நதியில்..!

❍

வானம்
அழுகிறது..
க(த)ண்ணீர் நிரம்பி
சிரிக்கிறது பூமி..!?

❍

பொழுது
விடிந்துவிட்டது..
இனி நிம்மதியாய்
தூங்கலாம்..
கூர்க்கா..!

# கடல் பயணங்கள் - நூல் அறிமுகம்

பயணங்களே நம்மை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்கின்றன. பயணங்களினால் எண்ணங்கள் விசாலமாகின்றன. உலக மக்களை இணைத்து பாதைகள் போடுகின்றன பயணங்கள். அவ்வாறு போடப்பட்ட பாதைகளில் நாம் அனைவரும் பயணிக்கிறோம்.பயணத்திற்காக போடப்படும் பாதைகளை நிலத்தில் போடுவதற்கும் நீரில் போடுவதற்கும் வேறுபாடு இருக்கிறது. நிலத்தில் நம் கண்கள் அறிந்து அமைக்கப்படும் பாதைகளின் பயணத்தில் சற்றே ஓய்வெடுக்கலாம், ஆபத்து எனில் பதுங்கிக் கொள்ளலாம், நமக்கு தேவையான உணவினையும் எப்படியும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் கடல்பயணங்கள் அப்படியல்ல. முதன்முதலாக கடலில் வழியையும் தேடி நிலத் துண்டுகளையும் கண்டங்களாக கண்டடைந்து உலகுக்கு அறிமுகப்படுத்திய முதல் மனிதனின் அனுபவங்களையே இந்த புத்தகத்தில் முழுவதும் ஆசிரியர் பகிர்ந்திருக்கிறார்.




வானத்து நட்சத்திரங்களை வழித்துணையாக கொண்டு திக்கு தெரியாமல் திசைகளை கண்டறிந்து சில நூறு நாட்கள் தொடர் பயணம் மேற்கொண்டு, நீண்ட நாட்களுக்கு பிறகு உலகின் வேறொரு மூலையில் இருக்கும் புதிய நிலப்பரப்பினை கண்களால் காணும் அந்த முதல் கணப்பொழுது எப்படி இருந்திருக்கும் என்பதை இப்புத்தகம் விளக்கிச் சொல்லி இருக்கிறது. விந்தைகள் மட்டுமே நிறைந்ததாக புதிய விலங்குகள், புதிய தாவரங்கள்,புதிய மனிதர்கள்,புதிய நிலப்பரப்பு என்பது மட்டுமே இருந்தது என்றும் சொல்லி விட முடியாது. பயணத்தின் வழியில் என்னவெல்லாம் ஆபத்துகள் சந்திக்கப் போகிறோம் என்பதை முன்னோர்கள் எவரும் சொல்லியிருந்திடாமல் முதன்முதலாக கடல்நீரில் கப்பலில் பயணம் கொண்ட முதல் மனிதர்களின் அனுபவங்களை அவரவரது குறிப்பு நூல்களில் எழுதி வைத்துவிட்டு சென்றிருப்பதிலிருந்து தான் பெற்ற தகவல்களை இந்த நூலின் ஆசிரியர் சுருக்கமாக சுட்டி விகடன் என்னும் நூலில் சிறுவர்களுக்கான தொடர் கட்டுரைகளாக பகிர்ந்து வந்ததன் தொகுப்பே இந்த நூல்.

இந்த நூலை முதலில் படிக்க எடுக்கும்பொழுது கப்பலில் பயணம் போக இருக்கும் உணர்வுடன் சில்லென்ற காற்று முகத்தில் மோதுவது போல் இருக்கும் உணர்வுடனேயே படிக்கத் தோன்றுகிறது. தொடர்ந்த புத்தகத்தின் பயணத்தில் முதல் பயணம் அவ்வாறு மட்டும் இருந்து விடவில்லை என்பது புரிந்துவிடுகிறது. வரலாற்றில் இடம்பெற்றிருக்கும் குறிப்பிட்ட சில மாலுமிகள் மட்டும் கடல்

பயணங்கள் மேற்கொண்டு வெற்றி கண்டவர்கள் என்று இருந்திருக்கவில்லை. ஏராளமானவர்கள் புதிய முயற்சியாக கடல் பயணம் மேற்கொண்டிருந்திருக்கிறார்கள். வழியில் அவர்கள் சந்தித்த ஆபத்தில் சொல்லாத கதைகளாக பாதியிலேயே கடலில் மூழ்கியும் இருந்திருக்கிறார்கள். தொடர் பயணத்தில் இறுதி வரை வெற்றியடைந்து புதிய நிலத்தை அடைந்தவர்களும் அங்கு வாழும் பழங்குடிகளால் பேராபத்தாக உணரப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். இப்படியும் முற்றுப்பெறாத கடல் பயணமாக பெரும்பாலானவர்களது முடிந்து விட்டிருக்கிறது. அதிலேயும் வெற்றிக் கண்டு திரும்பி வந்தவர்களின் வரலாறே குறிப்பில் இருக்கிறது. இதிலும் மிகச் சிலரான கொலம்பஸ், அமெரிகோ வெஸ்புகி, ஜேம்ஸ் குக், வாஸ்கோடகாமா, மார்கோபோலோ போன்றவர்களை பற்றி மட்டுமே பெரும்பாலும் அறிந்திருக்கிறோம். இவர்கள் மட்டுமல்லாமல் செங் ஹே, இபின் பதூதா, பார்த்தலோமியா டயஸ், ஜான் கபோட், சார்லஸ் டார்வின், வால்டர் ராலே, சார்லஸ் வில்லியம் பிபி போன்றவர்களின் கடல் பயணங்கள் பற்றியும் இந்த நூலில் இடம்பெற்றிருக்கிறது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்திற்காக கடலில் பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். சிலர் புதிய நிலங்களை கண்டடைந்து அவற்றை ஆக்கிரமித்துக் கொள்வதற்காகவும் வேறு சிலர் புதிய நிலப்பரப்பில் கிடைக்கும் இயற்கை வளங்களை பெறுவதற்காகவும், சிலர் மதக் கோட்பாடுகளை கற்றுக்கொண்டு தாங்கள் வாழும் நாட்டிற்கு கற்றுக் கொடுப்பதற்காகவும், மேலும் புதிய நாடுகளுடன் வணிக போக்குவரத்திற்காகவும், புதிய நிலங்களில் கண்டடையும் விலங்குகளை தங்கள் நாட்டிற்கு சிலவற்றை கொண்டு செல்வதற்காகவும், மருந்தாக உணவாக பயன்படும் தாவரங்களை பெறவும், புதியவற்றை ஆராய்ச்சி செய்யும் முயற்சியிலும், புதிய நிலப்பரப்பில் வாழும் மனிதர்களிடமிருந்து பொருள்களை அபகரிப்பதற்காகவும் எனவும் பல்வேறு காரணங்களுக்காக பயணங்களை மேற்கொண்டு புதிய பாதைகளை வகுத்து கப்பல் மாலுமிகளுடன் பயணித்து கண்டங்களை கண்டடைந்து வரைபடங்களை தயாரித்தவர்கள் எனவும் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

இதில் மா ஹே எனும் மங்கோலிய மற்றும் இஸ்லாமிய பெற்றோருக்கு பிறந்த திருநங்கையான தலைசிறந்த மாலுமியை சீனர்கள் மறக்க இயலாது. அரண்மனையில் மன்னருக்கு ஆலோசகராக வாழ்ந்த இவர் மன்னர் உதவியுடன் 3500 எண்ணிக்கையில் கப்பல்களை கட்டி தனது தொடர் பயணத்தில் உலக நாடுகளை இணைத்து சீனாவின் வர்த்தகத்திற்கு வழிகோலியவர். அவரது சுயசரிதை புத்தகத்தை படிக்கத் தூண்டும் படியான கட்டுரை இந்த நூலில் அடங்கியிருக்கிறது. மங்கோலியர்களை எதிரியாக கருதும் சீனர்கள் அரசனிடம் முறையிட்டு மா ஹே எனும் மங்கோலிய பெயர் கொண்டவர் நமக்கு எதிரியே. அரசனின் ஆலோசகராக இடம்பெறுவதில் விருப்பமில்லை என தெரிவித்ததில், அரசன் அவரது பெயரை மாற்றி செங் ஹே என அழைத்து, இனி இவர் நமது இனம் என அறிவித்திருக்கிறார். இதனை அறியும் பொழுது தமிழர்கள் தூய தமிழ் பெயர்களை பிள்ளைகளுக்கு சூட்டுவதும் இனம் காக்கும் முயற்சியில் ஒன்று எனத் தோன்றுகிறது.

பயணம் மேற்கொண்ட மார்க்கோ போலோ போன்றவர்கள் தாங்கள் எதற்காக பயணத்தை மேற்கொண்டார்களோ அதை மட்டுமே பெற்றுத் திரும்பி இருக்கிறார்கள் அங்கு வாழும் மக்களை அடிமைப்படுத்தி ஆட்சி புரிய வாய்ப்பிருந்தும் அதை அவர்கள் செய்யவில்லை. தங்கம் போல் விலை இருந்த உப்பை தாலிகான் எனும் பகுதியில் உள்ள மலைகளில் கண்டடைந்தும் புதிய விலங்குகளை கண்டு வியந்தும், புதிய மக்களின் விசித்திரமான போர் முறைகளை கண்டும் குறிப்புகளில் எழுதி வைத்தும் பயனடைந்தும் இருப்பதை எல்லாம்


அறியும் பொழுது வியப்பாக இருக்கிறது. சைனாவின் பழைய போர் முறைகளில் ஒன்றான பத்து ஆள் உயரத்திற்கு மங்கோனெல் என அழைக்கப்படும் பிரம்மாண்டமான உண்டிகோலை பயன்படுத்தி போரில் ஈடுபட்டது குறித்து மார்கோபோலோ தனது பயண குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார். போர் வீரர்கள் எரியும் நெருப்புப்பந்து,கற்கள், இறந்து போன அழுகிய மற்றும் கிருமிகளை கொண்டிருக்கும் மிருகங்களின் உடல்கள் இவற்றையெல்லாம் உண்டி கோலில் வைத்து எதிரிகளை நோக்கி வீசி எறிவார்கள் எனவும், போரில் பயன்படுத்தப்படும் குதிரைகளுக்கு வறண்ட நிலங்களில் உணவு இல்லாமல் உற்சாகமற்ற குதிரைகளைக் கொண்டு போரில் தோற்று விட வாய்ப்பாகவும், அதுவே பசுமையான புற்கள் அதிகம் உள்ள நிலங்களில் போரிடும் பொழுது வெற்றியும் கண்டடைந்து போரில் வெல்வதற்கான காரணியாக அந்த நிலத்தின் வளமும் இருந்திருக்கிறது என்றெல்லாம் குறித்து வைத்திருக்கிறார்.

தமிழகத்திற்கும் பயணம் செய்திருக்கும் மார்க்கோபோலோ தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள் கழுத்தில் நிறைய கனமான நகைகளை அணிந்து இருந்ததையும் அவர்கள் தரையில் அமர்வார்கள் என்பது போன்ற அவருக்கு புதியதான பழக்கங்களையும் நீரை உதடு படாமல் தூக்கி குடிப்பதை எல்லாம் வியந்தும் விந்தையென எழுதி வைத்திருக்கிறார்.

ஐரோப்பியர்களின் ஆசியாவை நோக்கிய பயணம் இரண்டு பாதைகளை வகுத்து இருக்கிறது. ஒன்று பட்டு நூல்களை பெறுவதற்கான பட்டுப்பாதை மற்றுமொன்று உணவில் பயன்படுத்தப்படும் மசாலாப் பொருட்களை பெறுவதற்கான மசாலாப்பாதை. இந்தோனேசியாவில் அதிக அளவு மசாலாப் பொருள்கள் கிடைப்பது உலக மக்களை கவர்ந்திருக்கிறது. இந்திய மக்கள் தனக்கென ஒரு கடல் வழி பயணம் மேற்கொண்டு பொருள்களை வாணிபம் செய்தது ஐரோப்பிய மக்களை வியப்பூட்டியிருக்கிறது. அதே பாதையை பயன்படுத்தி அம்மக்கள் இந்திய நாட்டிற்குள் புகுவதற்கு அரபு நாடுகள் தடையாக இருந்திருக்கின்றன. அதனாலேயே ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வர புதிய கடல் வழிப் பாதைகளை கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் அடைந்திருக்கிறார்கள். இப்படி பல சுவாரஸ்யமான தகவல்கள் அடங்கிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூல் இருக்கிறது.

உலகம் உருண்டையா தட்டையா என்பதே உறுதியாக அறியாத காலத்தில் மெகல்லன் மேற்கொண்ட பயணம் உலகம் உருண்டை தான் என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறது. ஒருவேளை தட்டையாக இருந்திருந்தால் உலகின் விளிம்பு ஆபத்தானதாக இருந்திருக்கும் என்பதையும் அறிந்திருக்கும் அவர், வழக்கமாக எல்லோரும் பயன்படுத்தும் திசைகளில் பயணிக்காமல் எதிர் திசையில் பயணித்து தன் பயணம் ஆரம்பித்த அதே இடத்திற்கு வந்து அடைந்திருக்கிறார். இறுதியாக இவர் செய்த இந்த பயணத்தை அடைவதற்காக அவர் மேற்கொண்ட பயிற்சியாக அமைந்த வழிப்பயணங்கள் சுவராசியமானதாக இருக்கிறது. இப்படி ஆபத்து நிறைந்த முதல் பயணங்களை துணிச்சலாக மேற்கொண்டு உலகை இணைத்து பொருளாதாரத்தில் உயர வைத்த முதல் பணியில் மாலுமிகளே இருந்திருக்கிறார்கள். பயணங்களால் ஏற்படும் நன்மைகளை அறிந்து உற்சாகப்படுத்துவதாக அமைந்திருக்கும் இந்த "கடல் பயணங்கள்"நூல் சிறுவர்களுக்கு ஏற்ற புத்தகம். பெரியவர்கள் படித்துணர்ந்து சிறுவர்களுக்கு கதைக்கும் கதையாகவும் இந்த நூல் அமைந்தால் சிறப்பாக இருக்கும்." கடல் பயணங்கள்" சிறந்ததொரு நூலின் பயணம்.

ஆசிரியர். : மருதன், பதிப்பகம். : கிழக்கு பதிப்பகம், பக்கங்கள். : 116



# உடைப்பு

சின்னண்ணன் வீட்டில் கண்ணாடிப் பெட்டிக்குள் பெரியப்பாவை வைத்திருந்தார்கள். சுற்றி இருந்த பெண்கள் மெல்ல ஒதுங்கி இடம் கொடுக்க, அருகில் போனேன். பெரியம்மா 'கண்ணா' என்றபடி சப்தமாய் அழ ஆரம்பிக்க, பெரியக்கா செல்லம்மாவும், அத்தைகளும் சேர்ந்து கொண்டனர். என் கவனமெல்லாம் பெரியப்பா மீதே இருந்தது.

கண்ணாடிப் பெட்டி மீது கையில் வைத்திருந்த பெரிய ரோஜாப்பூ மாலையைப் போட்டுவிட்டு அவரின் முகத்தைப் பார்த்தேன். எப்போதும் அவரிடம் இருக்கும் புன்னகை அப்படியே சாகாமல் இருந்தது. அந்த முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றேன். ‘கண்ணு வாடா.. இப்பத்தான் வர்றியா..?’வென வாஞ்சையுடன் கேட்பது போலிருந்தது.

நான் ஏறி விளையாண்ட நெஞ்சின் மீது விழுந்து கூட அழ முடியாமல் கண்ணாடிப் பெட்டி எங்கள் இருவருக்கும் இடையில் தடையாக இருந்தது. துக்கம் என் தொண்டையை அடைக்க, கண்களில் இருந்து கண்ணீர் வேகமாய்க் கன்னத்தில் இறங்கியது. எங்களை விட்டுப் போக என்னப்பா அவசரம் என மனசு கேட்டாலும் பதில் சொல்ல அவரில்லேயே.. போன முறை ஊருக்கு வந்த போது கூட அடுத்த முறை நீ ஊருக்கு வரும்போது நான் போயிருவேன்டா கண்ணுன்னு சொல்லலையே. நினைவின் அழுத்தம் கண்களில் நீரானது.

அவரின் மீதிருந்த கண்ணை மெல்லப் பெரியம்மா பக்கம் நகர்த்தினேன்.. அவர் தலைவிரி கோலமாக அமர்ந்திருந்தார். நேற்று இரவிலிருந்து அழுது அழுது ஓய்ந்திருப்பாள் போல. பெரியக்கா என்னைப் பார்த்து ‘தம்ம்ம்ப்ப்பீ.. அப்பாவப் பாருடா..’ எனக் கத்தினாள். பெரியம்மா என்னை நிமிர்ந்து பார்த்து ‘கண்ணாஆஆஆ.. உங்கப்பாவப் பாக்க வந்தியாஆஆஆ..? பாருடா.. நல்லாப்பாரு.. கண்ணு.. கண்ணுன்னு கூப்பிடுற பெரியப்பாவப் பாருடாஆஆஆ..’ எனக் கத்தினாள்.

பெரியம்மா அருகே முழந்தாளிட்டு அமர்ந்தேன்.. அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதேன். சின்னதாய்க் கண்ணீர் சிந்தினாலும் கண்ணா.. என்னாச்சு இப்போ.. எதுக்கு அழுறே.. எனக் கண்ணீரைத் துடைக்கும் பெரியம்மா இன்று கண்மூடிப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

‘அம்ம்ம்மா..’ மெல்லச் சொன்னேன்.

‘கண்ணாஆஆஆ’ என என்னை இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். எத்தனையோ முறை எனக்கு இந்த அணைப்புக் கிடைத்திருக்கிறது. போன முறை ஊருக்கு வந்துவிட்டுக் கிளம்பும் போது என்னை இழுத்து அணைத்து முத்தமிட்டார்.. அதில் அன்பு இருந்தது.. இதில் ஆறுதல் தேடும் மனமிருந்தது. எப்படி ஆறுதல் சொல்வேன்..? நான் உடைந்தேன், சப்தமாய் அழுதேன். அக்காவும் அத்தைகளும் அழுகையுடன் என்னை அணைக்க, அங்கிருந்த பெண்கள் மொத்தமாய் என்னை அழுத்திக் கொண்டார்கள். கதறல் ஒலிகளுக்கு இடையே பெரியம்மாவின் நெஞ்சோடு கிடந்தேன். அது பெரியப்பாவைத் தேடிக் கதறிக் கொண்டிருந்தது.. இந்தத் தேடல் அவரின் வாழ்நாளுக்கும் தொடரும்தானே.

‘இந்தா.. விடுங்க.. விடுங்க.. அவனை வெளிய வர விடுங்க..’ என்று கத்தினான் பெரியண்ணன் மாணிக்கம்.

அவன் பெரியப்பாவைப் போல் அரசுப் பள்ளி தமிழாசிரியர். காரைக்குடியில் வேலை பார்ப்பதால் அங்கு குடும்பத்துடன் இருக்கிறான். அவனின் குரலுக்கு எல்லாரும் விலக, மெல்ல எழுந்து வெளியில் வந்தேன். சொந்தங்களும் பெரியப்பாவுக்குத் தெரிந்தவர்களுமாக நிறையப் பேர் அமர்ந்திருந்தார்கள். எல்லார் முகத்திலும் சோகம். பெரியண்ணனுக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டேன்.

“நீ போய் உக்காருடா..” என்றான் சின்னண்ணன் ராஜேஷ், தேவகோட்டையில் ஒரு தனியார்

வங்கியில் காசாளர், ஊரில் இருந்துதான் வேலைக்குப் போகிறான்.

“சும்மா நிக்கிறேன்..”

“அதான் மாமா சித்தப்பான்னு நாலைந்து பேர் நிக்கிறோமே.. அப்புறம் நீயும் எதுக்கு.. எட்டுப் பத்துமணி நேரம் பஸ்ல வந்திருப்பே.. அலுப்பா இருக்காதா.. போ.. போய் உக்காரு..” என்றான் பெரியண்ணன் தோளைத்தொட்டு.

“ம்..” என்றபடி அருகில் கிடந்த சேரில் போய் அமர்ந்தேன்.

ஊரிலிருந்து வந்தபோது அண்ணன்கள், அப்பா, மாமாவை எல்லாம் கட்டியணைத்து விட்டு பெரியப்பாவைப் பார்க்க போய்விட்டதால் இப்போதுதான் அப்பாவை நன்றாகப் பார்த்தேன்.. இழப்பின் வலி முகத்தில் தெரிய சோகமாய் நின்றிருந்தார். பெரியப்பா இறந்ததைக் கேட்டு என்ன துடி துடித்திருப்பார்.. எப்படிக் கதறியிருப்பார்.. அவரை அண்ணனாய்ப் பார்த்ததைவிட அப்பாவாய்த்தானே பார்த்திருக்கிறார் இவர் என அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் சூன்யத்தை வெறித்தபடி நின்றிருந்தார்.

அதுவரை தப்பைச் சூடு பண்ணுகிறேன் என வைக்கோலைப் போட்டு எரித்துச் சுற்றி அமர்ந்து பேசியபடி, பீடியைக் கப்.. கப்பென இழுத்துக் கொண்டு, தப்பை ‘டண்..’ ‘டண்’ எனத் தட்டிப் பதம் பார்த்தவர்கள் சரியான பதம் வந்து விட்டது எனத் தெரிந்ததும் எழுந்து வந்து ‘டண்டண.. டண்டண..’ என அடிக்க ஆரம்பித்தார்கள்.

ஆட்கள் வருவதும் போவதுமாய் இருந்தார்கள்.

“அப்பா.. அம்மா கூப்பிடுறாங்க..” என ஓடி வந்தாள் என் ஆறு வயது மகள் ஆர்த்தி.

“ம்..” என அவளைப் பிடித்துக் கொண்டு சுலோச்சனா நின்ற இடத்துக்குப் போனேன். இரவெல்லாம் பஸ்ஸில் வந்த அயற்சி அவள் முகத்தில் தெரிந்தது.

“என்ன சுலோ..?”

“வாங்க வீட்டு வரைக்கும் பொயிட்டு ஏதாவது சாப்பிட்டோ இல்ல காபி குடிச்சிட்டோ வரலாம்.. அத்தைதான் பொயிட்டு வரச் சொன்னாங்க.. இன்னமும் வள்ளியத்தாச்சி வரலையாம்.. ஒரு மணிக்கு மேல ஆகும்ன்னு சொன்னாங்களாம்.. மூணு மணிக்கு மேலதான் தூக்குவாங்கன்னு அத்தை சொன்னாங்க..”

“ம்.. ஆமா.. சின்னக்கா சிங்கப்பூர்ல இருந்து வரணுமில்ல.. எனக்கு ஒண்ணும் வேண்டாம்.. நீ வீட்டுக்குப் போயி பேக்கெல்லாம் வச்சிட்டு வா.. பாப்பா எங்கூட இருக்கட்டும்.. எனக்கு இங்க எதுவும் வேலை இருக்கலாம்..”

“இங்க என்ன வேலை இருக்கு இப்போ.. சரி.. சாப்பிட வேண்டாம்.. சுதா அத்தாச்சி வீட்டுக்குத்தான் போயிருக்காகளாம்.. அவங்களக் காபி போடச் சொல்லிக் குடிச்சிட்டு வரலாம் வாங்க.. நாலஞ்சி மணிக்கு மேல ஆனா சாப்பிடாம நின்னு தலைவலி வந்துரும் உங்களுக்கு..”

“ம்.. சுதா வீட்டுக்குப் பொயிட்டாளாக்கும்.. ஆமா செல்வி அக்கா எங்க காணோம்..?”

“பின்னால இருந்தாங்க.. சமையல் பண்றவங்களுக்கு அவங்கதான் சாமானெல்லாம் எடுத்துக் கொடுக்குறாங்க.. ஆமா நீங்க பாக்கலையா..? போயிப் பாத்துட்டு வாரியளா..? உங்களத்தான்

கேட்டாக..”

“இல்லை.. இருக்கட்டும்.. வந்து பாத்துக்கலாம்.. இரு அப்பாக்கிட்டயும் அண்ணனுங்கக்கிட்டயும் சொல்லிட்டு வர்றேன்..” என்றபடி அவளின் பதிலுக்குக் காத்திராமல் அவர்கள் நின்ற இடம் நோக்கி நடந்தேன்.

ஆர்த்தியும் ஓடி வந்து கையைப் பிடித்துக் கொண்டாள்.

ஆர்த்திக்குப் பேர் வச்சதே பெரியப்பாதான்.. கல்யாணமாகி சுலோ உண்டாகி-யிருக்கான்னு தெரிஞ்சதும் பெரியப்பாவுக்கு அம்புட்டுச் சந்தோஷம்.. ‘கண்ணு உனக்குப் பொம்பளப்புள்ள பொறந்தா ஆர்த்தின்னுதான்டா பேர் வைக்கணும்.. அவுக சொன்னாங்க.. இவுக சொன்னாங்கன்னு வாயில நுழையாத பேரெல்லாம் வைக்கக்கூடாது..’ என்றார்.

‘என்னப்பா.. அது.. எல்லாரும் அப்பத்தா பேரை வைக்கணும்.. ஆயா பேரை வைக்கணும்.. சாமி பேரை வைக்கணும்ன்னு சொல்லுவாங்க.. சரி நீங்க தமிழாசிரியரா இருக்கீங்க.. தமிழ்ல கொற்கை, முல்லை, பொற்செல்வின்னு ஏதாவது பேர் வைக்கச் சொல்லுவீங்கன்னு பார்த்தா.. நீங்க என்னடான்னா ஆர்த்தின்னு வைக்கச் சொல்றீங்க.. அதெல்லாம் வேண்டாம்.. சோலையப்பங்கிற உங்க பேரோட, பெரியநாயகிங்கிற அம்மா பேரையும் சேர்த்து சோலைநாயகின்னு வைக்கலாம்ன்னு முடிவு பண்ணி சுலோக்கிட்டயும் சொல்லிட்டேன்..’ என்றேன்.

‘போடா கிறுக்கா.. சோலைநாயகியாம்.. சோலைநாயகி.. ஏன் எந்தம்பி பேரையும் உங்காத்தா பேரையும் சேர்த்து கந்தராணினு வையேன்.. ஆளப்பாரு.. எம் பேத்தி பேரு ஆர்த்திதான்.. அவ இப்பப் பொறந்தாலும் சரி.. அடுத்துப் பொறந்தாலும் சரி..’ என்றார்.

‘என்ன அந்தப் பேர்ல உங்களுக்கு அம்புட்டு விருப்பம்..?’ சிரித்துக் கொண்டே அவர் மடியில் தலை வைத்தேன்.

‘எங்க பள்ளிக்கூடத்துல ஆர்த்தின்னு ஒரு பொண்ணு படிச்சிச்சு.. அம்புட்டு அறிவுள்ள புள்ளடா கண்ணு அது.. சூட்டிகையான ஆளு.. எல்லாப் போட்டியிலயும் கலந்துக்கும்.. பத்தாவதுல நம்ம மாவட்டத்துல முதல்ல வந்துச்சு.. ஐயா.. ஐயான்னு எம்பின்னாலயே திரியும்.. அப்பன் சரியில்லை.. ஆத்தா இல்லாத புள்ள.. ரெண்டாந்தாரமா வந்தவ என்ன செஞ்சாலோ தெரியல.. போன வருசத்துல ஒரு நாள் தூக்குல தொங்கிருச்சுன்னு சொன்னாங்க.. ம்.. எல்லாம் முடிஞ்சி போச்சு.. எம்பேத்தியா மாதிரி எங்கிட்ட பாசமா இருந்த புள்ள... அதான் அந்தப் புள்ள ஞாபகமாக எம்பேத்திக்கு ஆர்த்தின்னு வைக்கணும்.. அந்தப்புள்ள மாதிரி கெட்டிக்காரியா வருவா.. அந்தப்புள்ள படிக்க ஆசைப்பட்டதையெல்லாம் எம்பேத்தியா படிக்கணும்..’ என் தலை தடவியபடி பேசிய பெரியப்பா கண் கலங்கினார். அப்பாதான் எதற்கெடுத்தாலும் கண்ணைக் கசக்குவார்.. பெரியப்பா எப்பவுமே கலங்கமாட்டார். முதன் முதலாய் அவர் கலங்கிப் பார்க்கிறேன்.

‘என்னப்பா இது.. சும்மா சொன்னேன்.. நீங்க சொன்னா வைக்க மாட்டேனே..’ என்றபடி அவர் தோள் கிடந்த துண்டால் கண்ணைத் துடைத்து விட்டேன்.

‘விடு.. என்னமோ அந்தப் புள்ளயப் பத்திப் பேசுனதும் கண் கலங்கிருச்சு.. ம்.. இப்போதைக்கு நீதான் பேத்தியைப் பெத்துக் கொடுக்கப் போறே.. உம்புள்ளக்கு அந்தப் பேரு சரியா இருக்கும்.. அவ பெரியாளா வந்து சாதனை மேல சாதனையாச் செய்யும் போது இந்தப் பெரியப்பனை

நினைச்சிப்பே.. அந்தாளு நல்ல பேரைத்தான் வச்சிருக்கான்னு மனசுக்குள்ள சொல்லிப்பே' என்றார்.

'சரிப்பா உங்க விருப்பம்..'ன்னு சொன்னவன் ஆர்த்தின்னே வச்சிட்டேன்.. ஆர்த்தின்னா அவருக்கு உயிர்.. அவளுக்கும்தான்.. எங்கப்பாவைவிட பெரியய்யாவைத்தான் ரொம்பப் பிடிக்கும்.

"அண்ணே சுலோவுக்கு வீடு வரைக்கும் போகணுமாம்.."

"ம்.. சரி.. போ.. வரும்போது வேஷ்டி எடுத்துக் கட்டிக்கிட்டு வா.. மொறதலயெல்லாம் செய்யணுமில்ல.."

"சரிண்ணே.." என்றதும் "சலவ பண்ணுன வேட்டி என்னோட பீரோவுல இருக்குடா.. எடுத்துக் கட்டிக்க.." என்றார் அப்பா.

"ம்.." என்றபடி சுலோவை நோக்கித் திரும்பினேன்.

'செல்வம்..' கூப்பிட்டான் சின்னண்ணன்.

செல்வராஜ்.. வீட்டில் செல்வம்.. வேலை செய்யுமிடத்தில் ராஜ். ஆனா பெரியப்பாவுக்கு மட்டும் எப்பவும் கண்ணு.. 'செல்வம்ன்னு கூப்பிட்டா என்ன பெரியப்பா.. அப்படி ஒரு தடவை உங்க வாயால கூப்பிடணும்ன்னு ஆசைப்பட்டா எப்பப் பார்த்தாலும் கண்ணுதான்.. எப்பத்தான் செல்வம்ன்னு கூப்பிடப் போறீங்களோ..?' என்று செல்லக் கோபம் கொள்ளும் போதெல்லாம் 'போடா.. எனக்கு நீ எப்பவும் கண்ணுதான்'னு சொல்லிச் சிரிப்பார். பெரியம்மாவும் பெரும்பாலும் கண்ணுன்னு சொல்வாங்கஞ் சில நேரங்களில் செல்லான்னும் சொல்வாங்கஞ் பெரியப்பா மட்டும்தான் செல்வம்ன்னு கூப்பிடுவதேயில்லை. அவர் கூப்பிடும் கண்ணுவில் ஒரு வாஞ்சை இருக்கும். இனி யார் என்னைக் கண்ணுன்னு வாய் நிறைய, அவரைப் போல் கூப்பிடப் போகிறார்கள்..? கண்ணீர் எட்டிப் பார்க்க, கையால் துடைத்துக் கொண்டு பின்னால் திரும்பினேன்.

"என்னண்ணே..?"

அருகில் வந்தவன் "சிகரெட்டா வச்சிருக்கே..?" என்றான் மெல்ல.

"ம்.. இருக்கு.." என பேண்ட் பாக்கெட்டில் கை விட்டேன்.

"எல்லாரும் இருக்காங்க.. அங்கிட்டு வா.." என மறைவாய்க் கூட்டிப் போய் பெட்டியை வாங்கி ஒரு சிகரெட்டை எடுக்க, "வச்சுக்கண்ணே எங்கிட்ட இருக்கு.." என்றபடி அதை அவனிடமே கொடுத்தேன். நாங்க அப்படித்தான்.. எங்களுக்குள் மரியாதை எல்லாம் எப்போதும் இல்லை.. நாங்க ரெண்டு பேரும் பீர் வாங்கி வீட்டிலிருக்கும் கோழியைப் பிடித்துக் கொண்டு போய் கொல்லையில் வைத்து திரக்கல் பண்ணி சாப்பிட்டவங்கதான்.. ஒரே சிகரெட்டை ரெண்டு பேரும் குடித்திருக்கிறோம்.. ஒரே பெண்ணை ரெண்டு பேரும் சைட் அடித்திருக்கிறோம்.

வாயில் சிகரெட்டை வைத்து என்னிடமிருந்த லைட்டரால் பத்த வைத்துக் கொண்டு புகையை ஊதியபடி "நினைக்கவே இல்லடா.. இப்படி ஆகும்ன்னு.. என்னத்தைச் சொல்ல, மத்தியானம் சாப்பிட்டுப் படுக்குறாரு.. சாயந்தரம் சுதா வருது, அதுகிட்ட நல்லாத்தான்

பேசிக்கிட்டு இருக்காரு. அது போயி கொஞ்ச நேரத்துல, அப்ப ஆறு மணியிருக்கும் நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக்குன்னாரு.. உங்க அத்தாச்சி சுடுதண்ணி போட்டு எடுத்துக்கிட்டுப் போறா அதுக்குள்ள எல்லாம் முடிஞ்சிருச்சு..” என்னாச்சுன்னு நான் கேட்காமலேயே சொல்லிக் கண் கலங்கினான்.

“நல்ல சாவுண்ணே.. வேறென்ன சொல்ல..”

“ம்.. இன்னம் கொஞ்ச நாளைக்கு இருந்திருக்கலாம்டா.. சரிடா, சுலோ காத்துக்கிட்டிருக்கு.. போ.. பொயிட்டுச் சீக்கிரமா வா..” என்றபடி சின்னண்ணன் வேஷ்டியில் லாவகமாய் சிகரெட் பாக்கெட்டை வைத்துக் கொண்டு வயல் பக்கமாய் போனான்.

நானும் நகர்ந்தேன்.

பெரியப்பாவின் இறப்பை என்னால் ஜீரணிக்கவே முடியலை. அவரின் சிரிப்பொலி மனசுக்குள் எழுந்து எழுந்து அழுத்தத்தைக் கொடுத்தது. கண் கலங்கிக் கொண்டேயிருந்தது.

“பெரியமாமா மாதிரி ஒரு பாசக்காரரை பாக்க முடியுமாங்க..” என்னோடு நடந்து கொண்டே கேட்டாள் சுலோ. என்னோட சொந்த அத்தை பொண்ணுதான் இவ. எங்க மூணு பேருக்கும் மூணு அத்தை வீட்டுல கல்யாணம் பண்ணி வச்சார் பெரியப்பா. சொந்தம் விட்டுப் போகக்கூடாது.. அந்தப் புள்ளையளுக்கு என்ன கொறச்சல்.. அழகு இல்லையா.. படிப்பு இல்லையா.. அந்நியத்துல போயி எவளோ ஒருத்தியைக் கொண்டாறதுக்கு இதுகளைக் கொண்டாந்தா என்னங்கிறேன்னு பெரியப்பா ஒவ்வொரு கல்யாணத்தப்போ கேட்கும் போது யாரும் மறுப்பேதும் சொல்லவில்லை. குடும்ப உறவுகளை அவர் எப்போதும் நெருக்கத்திலேயே வைத்திருப்பார்.

“ஆமா.. பெரியப்பாவை மாதிரி ஒருத்தரை நம்ம குடும்பத்துல பார்க்கவே முடியாது சுலோ.. எல்லாருக்கும் நல்ல மனுசனா இருந்தார்.. திடீர்ன்னு பொயிட்டார்..” சொன்ன போது கண் கலங்க, தொண்டை அடைத்தது.

சுலோ இதற்கு மேல் பேச வேண்டாமென மௌனமானாள்.

பேசாமல் நடந்தோம்.. ஆர்த்தி மட்டும் ஏதோ கத்திக் கொண்டு வந்தாள்.

எங்க குடும்பம் பெருங்குடும்பம்.. பெரியப்பா, அப்பா, அத்தைகள் என மொத்தம் அஞ்சு பேர். ஐயாவைத் தொடர்ந்து அப்பத்தாவும் போய்ச் சேர குடும்பப் பொறுப்பு முழுவதும் பெரியப்பா தலையில் ஏறியது. தன் சம்பாத்தியத்தில் அப்பாவைப் படிக்க வைத்து, அத்தைகளுக்கு கல்யாணம் பண்ணி வைத்து, ஊருக்குள் அவர்கள் பிறந்த கூரை வீட்டை ரெண்டு பத்தி ஓட்டு வீடாக்கினார்.

எங்க எல்லாருடைய கல்யாணமும் முடிந்து ஒவ்வொருவராய் வயல் பக்கம் வீடு கட்டும் வரை பொதுக் குடும்பம்தான். பெரியப்பாதான் வரவு செலவெல்லாம்.. அப்பா மாதாமாதம் சம்பளத்தைக் கொண்டு வந்து பெரியப்பாவிடம் கொடுப்பதுடன் சரி, எதையும் கண்டுக்க மாட்டார். எங்க படிப்பு.. கல்யாணம் என எல்லாமே பெரியப்பாதான்.

அப்பாவுக்கும் பெரியப்பாவுக்கும் இருக்கும் நெருக்கத்தைவிட அம்மா, பெரியம்மாவுக்குள் நெருக்கம் கூடுதலாய் இருக்கும். அந்த மாதிரி ஒரு அன்பை நான் வேறு எங்கும் பார்த்ததில்லை. கூடப்பொறந்த உறவு மாதிரி பெரியம்மா எதாயிருந்தாலும் ராணிக்கிட்ட கேட்டுக்கிறேன்னு

சொல்வாங்க. அம்மாவை யார்க்கிட்டயும் விட்டுக் கொடுக்கமாட்டாங்க. அம்மாவும் அப்படித்தான், யார் என்ன சொன்னாலும் அக்கா என்ன சொன்னாங்க.. அவங்க சரின்னு சொல்லிட்டா பின்னே நான் சொல்றதுக்கு என்ன இருக்குன்னு சொல்லும். தனியே வீடு கட்டிப் போன பின்னும் கூட அந்தப் பாசத்தில் பிரிவில்லை.

படிக்கும் காலத்தில் வாரவாராம் அத்தைகள் வந்துவிட, எங்க வீடே சந்தோஷத்தில் திளைத்திருக்கும். தேவகோட்டையில் கறிக்கடை வைத்திருக்கும் செய்யது ராவுத்தர் பெரியப்பாவுக்கு ரொம்ப நெருக்கம். அவரை சேது ராவுத்தர்ன்னுதான் சொல்வார். அங்க போய் கறி, எலும்பென எல்லாம் அள்ளி வருவார். இல்லேன்னா வீட்டில் இருக்கும் கோழியில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு 'கண்ணு வாடா' என என்னை அழைத்துக் கொண்டு வீட்டின் பின்புறமிருக்கும் கசாலைப் பக்கம் சென்று கழுத்தை அறுத்து, முடியெல்லாம் பிய்த்து வழுவழுவெனக் கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்து, நீயே எல்லா வேலையையும் இழுத்துப் பாக்காம உங்கக்கா, நாத்துனாரு எல்லாரையும் பாக்கச் சொல்லுன்னு சொல்லுவார்.

அம்மா அவருக்குத் தாய்மாமா மகள் என்பதால் உரிமையுடன் பேசுவார்.திட்ட வேண்டிய நேரத்தில் திட்டுவார். அப்பா சம்பளம் பணம் கொண்டு வந்து கொடுத்ததும் அதில் பாதியை அம்மாவிடம் கொடுத்து கொஞ்சத்தை நீ பேங்குல போட்டு வையி, பின்னால உதவியா இருக்கும். அவனுக்கு அதெல்லாம் தெரியாது, அவனுக்கிட்டயும் கொஞ்சம் கொடு.. செலவுக்கு இல்லாம எங்கிட்ட கேக்க யோசிச்சிக்கிட்டுத் திரிவான். நீதான் பாக்குறியே.. புள்ளய என்ன படிக்குதுகனாச்சும் கேக்குறானான்னு பாத்தியா. யாரு என்ன கேட்டாலும் எங்கண்ணன் பாத்துக்கும்ன்னு சொல்லிட்டு வந்துடுறான். படிக்க வச்சேன்.. ஊர் உலகத்துல எப்படி வாழணும்ன்னு கத்துக் கொடுக்க மறந்துட்டேன் அதான் வெகுளியா வளர்ந்துட்டான் என்று சொல்வார்.

அடிக்கடி அவனுக்கு அப்பனாத்தா எல்லாமே நாந்தான், எனக்குப் பின்னால நீங்கள்லாம் இருந்தாலும் கூட நானில்லாம அவன் ரொம்பச் சிரமப்படுவான். யாரையும் அதிர்ந்து பேசமாட்டான், தனக்கு என்ன வேணும்ன்னு கேட்டு வாங்க மாட்டான்னு சொல்வார். அவனைப் பத்திரமாப் பாத்துக்கங்கன்னு எப்பவாச்சும் சொல்றதை இப்பச் சில நாளா அடிக்கடி சொல்றாருடான்னு அம்மா சொன்னுச்சு. எங்கிட்டயும் போனில் அப்படிச் சொல்ல ஆரம்பித்திருந்தார்.

பெரியப்பா திருவாடனையில் தமிழாசிரியராய் இருந்து இரண்டு வருசத்துக்கு முன்னாலதான் ரிட்டையர் ஆனார். வாத்தியாருன்னா ஊருக்குள்ள தனி மரியாதை.. அவர் பேச்சுக்கு எதிர் பேச்சே இல்லை.. சோலையப்பன் சொன்னா சரியா இருக்கும்ன்னு அவருக்கு மூத்தவங்களே சொல்லுவாங்க. இதுநாள் வரைக்கும் யார் கூடவும் எதற்காகவும் சண்டை போட்டதில்லை. எங்களை எப்படிப் பாக்குறாரோ அப்படித்தான் மாப்பிள்ளைகள், மருமக்கள் முதல் பேரப்பிள்ளைகள் வரைக்கும், இதுவரை குடும்பங்களுக்குள் எந்த விரிசலும் வந்ததில்லை.

எல்லாரும் தனித்தனியா வீடு கட்டினப்போ.. ஊருக்குள்ள சிலர் பெரியப்பாக்கிட்ட உங்க கண்ணோட மாம்பூ வாசனையா சொத்துப் பத்தப் பிரிச்சிக்கலாமேன்னு சொன்னதும் எங்க வீட்டுக்கு வந்து அப்பாவிடம் 'நானும் சின்னவன் வீட்டுல இருக்கேன்.. நீயும் கண்ணு கட்டுன வீட்டுக்கு வந்துட்டே.. நாம பொறந்த வீடு, நிலபுலமெல்லாம் ரெண்டு பேரும் சமமாப் பிரிச்சிக்கலாம்ப்பா' என்றார்.

'அட ஏண்ணே.. இப்ப என்ன அவசரம்..? இப்ப நாம பாக்குற மாதிரி.. நாளைக்கு அவனுங்க பாத்துட்டுப் போறானுங்க.. அவனுங்ககளை நாம ஏன் பிரிக்கணும்.." அப்படின்னு அப்பா பட்டுன்னு சொல்லிட்டார்.

'அப்படியெல்லாம் இல்லப்பா.. அவனுக இனி விவசாயம் பாப்பாங்களான்னு தெரியாது.. ஆளு வச்சிப் பாத்தாலும் சரி வருமா தெரியலை.. பிரிச்சிட்டோமுன்னா அவனவன் வேணுமின்னா வச்சிக்குவான்.. இல்லேன்னா வித்துட்டுப் போகட்டும்.. அப்புறம் வீடு இளையவனுக்குத்தான் போவணும்.. அதை நீ எடுத்துக்க..'

'சும்மா இருண்ணே.. எனக்குத் தகப்பான நின்னு எல்லாம் பாத்திருக்கீங்க.. உந்தம்பிக்கிட்ட யாரு என்ன கேட்டாலும் எங்கண்ணன் பாத்துக்கும்ன்னு சொல்லுவான்னு இந்த ஊர் சொல்லும்.. அதைத்தான் இப்பவும் சொல்றேன்.. எல்லாமே அப்படியே இருக்கட்டும்.. நீங்களே பாத்துக்கங்க..'

'அடேய்.. புரிஞ்சிக்க.. இதெல்லாம் அவசியமானது.. பிரிக்கிறதால நமக்குள்ள பிரிவு வந்துரும்ன்னு பயப்படுறியா.. கடைசி வரைக்கும் நாம எல்லாரும் ஒண்ணாத்தான் இருப்போம்.. எனக்கு நீயும் தங்கச்சிகளும் எப்பவும் பிள்ளைங்கதான்..'

'சரி பிரிச்சிக்குவோம்.. நம்ம வீடு அப்படியே இருக்கட்டும்.. நல்லது கெட்டதுக்கு நாம எல்லாரும் அங்கயே ஒண்ணு கூடலாம்.. இங்கதானே இருக்கோம்.. சுத்தம் பண்ணி, மராமத்துப் பண்ணி வச்சிக்கலாம்..' என அப்பா சொன்னதை பெரியப்பா ஏத்துக்கொண்டார். இதுவரை அந்த வீடு பொது வீடாய்த்தான் இருக்கிறது.

❍ ❍ ❍

"எதார்த்தமா எல்லாரையும் பாத்துட்டுப் போவோம்ன்னு கௌம்பி வந்தேன்.. அப்பத்தான் அவருக்கிட்ட பேசிக்கிட்டு இருந்துட்டு வாரேன்.. காலையில சீக்கிரம் கிளம்பிருவேன்னு அவருக்கிட்ட சொன்னதும் எந்தலையைக் கோதி நல்லாயிருக்கணும் எம்புள்ள.. கருப்பன் எந்தக் குறையும் வைக்கமாட்டான் அப்படின்னு சொன்னார். கொஞ்ச நேரத்துல செத்துப் பொயிட்டார்ன்னு சின்னண்ணன் ஓடியாருது.. நம்பவே முடியலை.." காபியைக் கொடுத்தபடி சுதா புலம்பினாள்.

"ம்.. யார் எதிர்பார்த்தா.. இப்படி படக்குன்னு போவாருன்னு.. போனவாரம் பேசினப்போ தீபாவளிக்கு வருவியல்லன்னு கேட்டார்.. இப்ப வர்ற தீபாவளிக்கு அவரும் இல்ல.. நமக்குத் தீபாவளியும் இல்லை.."

"செத்தா நம்ம பழைய வீட்டுலதான் போட்டுத் தூக்கிட்டுப் போகணும்ன்னு பெரியப்பா எப்பவும் சொல்வாங்கதானே.. அதனால அண்ணனோட ஆசை பழைய வீட்டுல போட்டுத் தூக்கணும்ன்னு.. அங்க கொண்டு போயிடலாம்ன்னு அப்பா சொன்னாங்க.. ஆனா ஆளுப்பேரு வந்தா இடம் பத்தாது.. மூணு பேருமே பெரிய வீடாக் கட்டிப் போட்டிருக்கயில அங்க வெளியில கொட்டகை போட்டு அப்பாவை வச்சா நல்லாவா இருக்கும்ன்னு பெரியண்ணன் சொல்லிருச்சு.. அதுவும் சரிதான்.. அவருக்கு பழக்க வழக்கம் அதிகம்.. கூட்டம் அதிகம் கூடும்ன்னு அப்பாவும் ஒத்துக்கிட்டாங்க.. அதான் சின்னண்ணன் வீட்டுலயே வச்சிட்டாங்க.."

“ம்.. சின்னண்ணன் வீட்டுல நல்ல பொழக்கமா இருக்கு.. பழைய வீடுன்னா செரமஞ்தான்.. ஆமா பெரியப்பா செத்துட்டாருன்னு தெரிஞ்சதும் அப்பா எப்படித் தாங்கிக்கிட்டார்.. கதறி அழுதிருப்பாரே..? அவங்க அண்ணன் தம்பி மாதிரி வாழலையே.. அப்பன் மகனாத்தானே இருந்தாங்க..”

“அதெல்லாம் அழுகவேயில்லண்ணே.. சேதி கேட்டதும் அப்படியே திண்டப் புடிச்சிக்கிட்டு பேசாம உக்காந்தவருதான்.. இன்னமும் அப்படியே இறுக்கத்தோடதான் இருக்கார்.. வெடிச்சி அழுதுட்டா மனச்சுமை குறையும்.. ஆனா அவர் இதுவரை அழலை.. அதான் பயமாயிருக்குண்ணே..”

“ம்.. சின்ன விஷயத்துக்குக் கூட கண் கலங்குவாரு.. இதுக்கு அழலைன்னா.. வருத்தம் அவரை அழுத்தி வச்சிருக்கு போல..”

“ம்.. அழுத்தம் நல்லதில்லண்ணே.. அவர் அழணும்ணே..”

“அடக்கம் பண்ணும் போதாவது அழுதுருவார் விடு..”

❍ ❍ ❍

சின்னக்கா வந்ததும் பெரியப்பாவைத் தூக்குவதற்கான ஏற்பாடுகளை வேகவேகமாகச் செய்தார்கள். கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த உடலை வளைத்து உட்கார வைத்துக் குளிப்பாட்டுவது சிரமம் என்பதால் அதிலிருந்து தூக்கி வாசலில் போட்டிருந்த மரநாற்காலியில் கொண்டு வந்து கிடத்தினார்கள். அவரின் உடல் கருத்திருந்த போதும் முகம் மட்டும் இன்னும் அப்படியே இருந்தது.

நீர்மாலை எடுத்து வரப் புறப்பட்டோம். பெண்கள் எல்லாம் கதறியபடி வர ஊரணியில் போய் குளித்துக் குடங்களில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தோம். அவரைக் குளிப்பாட்டி, பாடையில் தூக்கிப் படுக்க வைத்தார்கள்.

இறுதி ஊர்வலத்துக்குத் தயாராகிவிட்ட பெரியப்பா மீது பெண்கள் எல்லாம் விழுந்து கதறினார்கள். எனக்கும் என்னைச் சுமந்த நெஞ்சின் மீது கடைசியாக தலை சாய்க்க வேண்டும் என்ற எண்ணம் எழ, கண்ணீரோடு அவர் மீது விழுந்து ‘அப்ப்ப்பா..’ எனக் கத்தினேன். ‘செல்வம் என்ன செய்யட்டும்.. அவரோட விதி அம்புட்டுத்தான்..’ என்றபடி பெரியண்ணன் என்னைத் தூக்கி அணைத்துக் கொள்ள, சின்னண்ணனும் என்னை அணைத்துக் கொண்டான்.

வீட்டில் செய்ய வேண்டிய முறைகள் செய்து, மகள் மருமகள் குடமெல்லாம் உடைத்து, பூப்பல்லக்கில் பெரியப்பாவை ஏற்றியபோது பேரன்கள் வாங்கி வைத்திருந்த பத்தாயிரம் வாலா வெடி வைக்கப்பட்டது. அது படபடவென வெடிக்க, பெரியப்பா வீட்டை விட்டுக் கிளம்பினார்.

அப்பா பேசாமல் முன்னால் நடந்து போய்க் கொண்டிருந்தார். எத்தனை வலியைச் சுமந்து நடக்கிறார் என்பது அவரின் தளர்ந்த நடையில் தெரிந்தது.

சுடுகாட்டில் பெரியப்பாவுக்குச் செய்ய வேண்டிய மொறையெல்லாம் செய்து, பெரியண்ணனுக்கு மொட்டை அடிக்க, உட்கார வைத்த போது ‘மூணு பேருக்கும் மொட்டை

அடிங்க.. அவருக்கு மூணு பேரும் ஒண்ணுதான்..' அப்பாதான் வாய் திறந்தார்.

"சொல்லப்போனா நீதான் அவனுக்கு மூத்தபிள்ளை.. நீயும் செஞ்சிக்கிட்டாலும் சரிதான் கந்தசாமி.." என்றார் அப்பாவுக்கு மாமா முறையான மருதாச்சலம் ஐயா.

"எனக்கு ஆசைதான்.. ஆனா மொறையின்னு ஒண்ணு இருக்குல்ல மாமா.. பயலுக இருக்கானுகள்ல.. அவனுக செய்யட்டும்.. கருமாதிக்கு இராமேஸ்வரத்துல நான் அடிச்சிக்கிறேன் மாமா.." என்றார்.

எல்லாம் முடிந்து இருவர் குளிக்குள் இறங்கி, பெரியப்பாவை வாங்கி உள்ளே வைத்தார்கள்.. தலை கிழக்க பாக்க இருக்கட்டும்ப்பா என்று ஒருவர் சொல்ல, பெரியப்பாவின் தலையை லேசாக சாய்த்து வைத்தார்கள்.

'கட்டெல்லாம் அவுத்து விட்டுட்டு அந்தச் சேலையை நல்லா இழுத்துப் போட்டுட்டு ரெண்டு பேரும் அப்படியே ஒண்ணா மேல ஏறுங்கப்பா' என மருதாசலம் ஐயா சொல்ல, அதன்படி அவர்கள் மேலே ஜம்ப் பண்ணி வந்தார்கள்.

அவ்வளவுதான் வாத்தியாரின் வாழ்க்கை முடிவுக்கு வந்தது.

பிறநாட்டார் வாங்க.. அங்காளி பங்காளி வாங்க.. என நாவிதர் கூப்பிட பெரியப்பாவின் மீது மண்ணள்ளிப் போட்டு ஒவ்வொருவராய் நகர, அப்பாவும் அள்ளிப் போட்டுவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.. அப்பவும் அவர் அழவில்லை.. என்ன மாதிரியான அழுத்தத்துக்குள் அவர் இருக்கார் என்பது எனக்குப் புரியவில்லை..

'நல்லா மூடிருங்கப்பா..' என்று சொல்லிவிட்டு 'எப்பா திரும்பிப் பார்க்காமப் போங்கப்பா' என்ற வாசு மாமாவின் குரலை ஆமோதிப்பது போல் எல்லாரும் அங்கிருந்து நகர்ந்தோம்.

வேலை பார்த்தவர்களுக்கான பணத்தைக் கட்டத்தலையில் வைத்துத்தான் பிரித்துக் கொடுப்பார்கள் என்பதால் ஆலமரத்துச் செய்யில் இருக்கும் மஞ்சணத்தி மர நிழலில் அமர்ந்து, வாசு மாமா ஒவ்வொருவராக அழைத்து கேலியும் கிண்டலுமாகப் பேசியபடி பணத்தைக் கொடுத்தார்.

எல்லாம் முடிந்து வீடு நோக்கி நடக்கலானோம்.

அப்பா ரொம்பத் தளர்வாய் நடந்து வந்து கொண்டிருந்தார். பெரியத்தை மகன் அவரை மெல்ல அழைத்து வந்தான்.

வீட்டுக்குள் நுழைந்ததும் எல்லாரும் கதறி அழுதார்கள்.. அப்பாவைக் கட்டிக் கொண்டு அழுதார்கள்.. அவர் எதுவும் சொல்லாமல் மரம் போல் நின்றார்.

பெரியப்பா இல்லாத வீடு வெறுமையாய் இருந்தது.

❍ ❍ ❍

தூக்கத்தில் இருந்து எழுந்தவன் ஒண்ணுக்கு இருக்கலாமென வெளியில் போனேன். அப்பா வரண்டாவில் அமர்ந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“தூங்கலையாப்பா..?”

“ம்.. தூக்கம் வரலைப்பா..”

“நேத்தும் தூங்கியிருக்க மாட்டீங்க தானே..”

“ம்..”

“போங்க போயிப் படுங்க..”

“நீ போ.. படு.. வர்றேன்..” என்றார்.

“அப்பா.. தூங்கலைன்னா உடம்பு என்னாகும்.. அதுவும் நடு ராத்திரியில எதுக்கு இங்க உக்காந்துக்கிட்டு.. போய் படுங்க..” எனச் சொல்லிவிட்டு வெளியில் போனேன்.

நாய்கள் விடாமல் குரைத்துக் கொண்டிருந்தன.

கட்டாமல் திரிந்த மாடொன்று என்னைப் பார்த்ததும் தடத்தடவென ஓடியது. திரும்பி வரும் போது அப்பா அங்கயே அமர்ந்திருந்தார்.

“இன்னும் தூங்கப் போகலையா நீங்க..?” என்றபடி அவரின் கைபிடித்து “வாங்க.. படுக்காம உக்காந்திருந்தா உடம்புக்கு நல்லதில்லைஞ்” என்றேன்.

மெல்ல எழுந்தவர் “நேத்து எங்கண்ணன் கட்டையாவாச்சும் இங்க கிடந்தாருடா.. செல்வம்.. இன்னக்கி..” என்றபடி என் தோள் சாய்ந்தார். எனக்கு ஆறுதல் சொல்ல வேண்டியவரை நான் ஆறுதலாய் அணைத்துக் கொண்டேன்.

அணையை முட்டி நிற்கும் தண்ணீர் ஒரு சிறு உடைப்பில் பொங்கி வேகமெடுப்பது போல், அந்த இரவின் இருளைத் துளைத்து வெடித்து அழ ஆரம்பித்தார்ஞ் ஓயட்டும் எனக் காத்திருந்தேன். காற்றின் வேகம் மெல்லக் கூடிக் கொண்டிருந்தது, அப்பாவின் உடைப்பும்தான்.



**கா.ந.கல்யாணசுந்தரம்**

அப்போதெல்லாம் எங்களுக்கு
வலி தெரியாது
சொற்ப ஊதியம்தான் என்றாலும்
சோர்வின்றி ஆடுவோம்..
குழந்தைகளும் பெரியோர்களும்
கண்டு ரசித்த காட்சிகள்
இப்போது எங்கள் கண்முன்னே!
இந்த தடைக்காலம்
எப்போது முடியும்?
கருணைத்தொகை வயிற்றைக்
கழுவினாலும் கலைப்பணி
ஒன்றே மனமெங்கும்!
உடலின் பாரம் அழுத்தி
கால் வீங்கி பெருத்தாலும்
அம்மன் உற்சவத் தேரின் முன்பு
நாங்கள் ராஜா ராணி வேடமிட்டு
பொய்க்கால் குதிரையோடு
சுழன்று சுழன்று ஆடும்போதெல்லாம்
குழந்தைகளின் குதூகலம்
கைத்தட்டலோடு கைகுலுக்கும்.
ஆன்மிகத்தோடு இணைந்த
நாட்டுப்புறக் கலைகளுக்கு
மக்களின் அங்கீகாரம்
மங்காது எப்போதும் மின்னும்!
தன்னம்பிக்கைத் துளிர்விட
காத்திருக்கிறோம் துவளாது!

# எங்கும் நிறைந்தவன்



ஓதி முடித்த திருமறையை உறையிலிட்டு மூடி வைத்துவிட்டு எழுந்த உஸ்மான் ஹாலில் இருந்த இருக்கையில் வந்து அமரவும், கல்லூரியிலிருந்து வீடு திரும்பிய அவர் அண்ணன் மகன் அஸ்கர், "அஸ்ஸலாமு அலைக்கும் சாச்சா.." என்றவாறு உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

"வாஅலைக்கும் அஸ்ஸலாம் அஸ்கர். இப்பத்தான் வர்றியா?" என்று கேட்டார்.

"ஆமாம் சாச்சா.." என்றவாறு புத்தகங்களை ஷெல்ஃபில் வைத்துவிட்டு வந்து அவர் அருகில் அமர்ந்தான் அஸ்கர்.

"சாச்சா, உங்களுக்கு ஓர் அதிசயத்தைக் காட்டப் போறேன்."

சொல்லிக்கொண்டே கைப்பேசியை எடுத்து ஆன் செய்தான் அஸ்கர்.

"அப்படி என்னப்பா அந்த அதிசயம்?"

ஆவலாய்க் கேட்டார் உஸ்மான்.

கைப்பேசியில் பதிவு செய்துக் கொண்டு வந்த அந்தப் படத்தைக் காட்டி னான் அஸ்கர்.

"ஒரு பெண்மணி உருளைக் கிழங்கு வெட்டும்போது இதைப் பார்த்திருக் கிறாள்." என்றவாறு கைப்பேசியை உஸ்மானிடம் கொடுத்தான் அஸ்கர்.

அதை அவர் வாங்கிப் பார்த்தார்.

பாதி வெட்டப்பட்ட நிலையிலிருந்த அந்த உருளைக்கிழங்கில் "அல்லாஹ்" என்று அரபியில் எழுதி இருந்தது.

அதைச் சாதாரணமாகப் பார்த்துவிட்டுக் கைப்பேசியைத் திருப்பிக் கொடுத்தார் உஸ்மான். அவர் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை.

சாச்சா ஆச்சரியத்தில் துள்ளுவார். எல்லோரையும் அழைத்துக் காட்டு வார். என்றெல்லாம் எதிர்பார்த்த அஸ்கருக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

"என்ன சாச்சா நீங்க? எவ்வளவுப் பெரிய அதிசயத்தைக் கொண்டு வந்து காட்டி இருக்கிறேன். நீங்க ஒண்ணுமே சொல்லமாட்டேங்கறீங்க?" என்று நொந்து கொண்டான்.

அமைதியாக அவனைப் பார்த்த உஸ்மான் சொன்னார்:

"அஸ்கர்.. வானத்தில் ஒரு நாள் மக்ரீப் நேரத்துல சிவந்த மேகங்களுக் கிடையில் "அல்லாஹ்" என்ற எழுத்துக்கள் தெரிந்தபோது மக்கள் அதை ஆச்சரியமாகப் பார்த்தனர். அதேபோன்று வெட்டப்பட்டு கசாப்புக் கடையில் தொங்

கிக்கொண்டிருந்த ஆட்டின் தொடையிலும் "அல்லாஹ்" என்று காணப்பட்டது. இதுபோல் உருளைக் கிழங்கு, முட்டைக்கோஸ், பூசணிக்காய் போன்ற காய் கறிகள் வெட்டப்படும்போது அவ்வப்போது "அல்லாஹ்" என்ற வார்த்தை தெரிவது ஆங்காங்கே நிகழ்ந்துக் கொண்டுத்தான் இருக்கிறது."

"அப்ப இது அதிசயம்தானே சாச்சா?"

"இல்லை."

அதிர்ந்தான் அஸ்கர்.

"ஏன் சாச்சா அப்படி சொல்றீங்க?"

"எங்கும், எதிலும் பரிபூரணமாய் நிறைந்திருப்பவன்தான் அல்லாஹ். அதனால் அவன் பெயர் இப்படித் தெரிவது ஒன்றும் எனக்கு ஆச்சரியமான விஷய மாகத் தெரியவில்லை."

இப்போது அஸ்கருக்குப் புரிந்தது.

அவன் மௌனமாக இருப்பதைப் பார்த்த உஸ்மான், "அஸ்கர், இது ஓர் அதிசயமான விஷயம் என்று நீ எல்லோருக்கும் காட்டிக்கொண்டுத் திரிவதில் பிரயோஜனமில்லை. முதலில் நமக்குக் கடமையாக்கப்பட்டதைப் பின்பற்று. பிறகு இதையெல்லாம் பார்க்கலாம்." என்றார்.


அதைக் கேட்டு லேசாகக் குழம்பினான் அஸ்கர்.

"சாச்சா.. நீங்க என்ன சொல்றீங்க..?"

"போன வாரம் இந்தியாவுக்கும், பாகிஸ்தனுக்கும் இடையே நடந்த கிரிக்கெட் விளையாட்டை நீ எவ்வளவு ஆர்வமாய் அமர்ந்து பார்த்துக்கிட்டிருந்தே? தொழுகைக்கு நேரமாகியும், அதை உன் சகோதரி வந்து நினைவூட்டிய பிறகும் நீ அசையவே இல்லை. ஏன்? அப்படி என்ன அவ்வளவு ஆர்வம் அந்த விளையாட்டில்? அந்த ஆட்டம் முடிந்த பிறகே நீ களா தொழுதிருக்கே. இது அவசியமா? 'அல்லாஹ்' என்ற வார்த்தை அதிசயமாகத் தெரிகிறது என்று நீ எல்லோருக்கும் காட்டிக் கொண்டுத் திரிவதால் புண்ணியம் கிடைக்கும் என்று நீ எண்ணுவதைவிட முதலில் கடமை தவறாமல் ஐவேளையும் தொழுதுவிட்டு அதன் பிறகு வேணுமானால் நீ மற்றதை செய். புரியுதா?"

'புரிந்தது' என்கிற பாவனையில் தலையசைத்தான் அஸ்கர்.

மல்லை மு. இராமநாதன்



# அழகு குளத்தில்

உன் அழகு குளத்தில்.
காதல் மீனா கிடவா

நீ ஒரு கழுமரமாகி
கண்ணைக் கட்டிக் கொண்டு
உச்சியைத் தொடு என்றாலும்
தொடுவேன்..
என்னை காதலிப்பதாய்
ஒரு வார்த்தை சொல் போதும்.

நீ"உம்" என்று ஒரு பார்வை மொழி
பேசு.
காதல் கண்ணாடி வளையலை
உன் மனக் கைகளில்
உடையாமல் போடும் என் மனக்கை..

என் மன விரலுக்கேற்ற
காதல் கணையாழி
உன் கண் வலையில் விழுந்தது
நீ எடுத்துப் போட வா :

நான் வானமாய் விரிந்தேன்
உன் எண்ணப் பறவை சிறகு விரிக்க

நான் திரையரங்கு
நீ காதல் படம் பார்த்து
என்னை காதலிக்க.


உன் விழி வெட்டுக்கிளி - என்
தோள் மேல் அமர - நான்
விளை நிலமானேன்,

உன் மொழி மழையில் -என்
நெஞ்ச நிலம் நிறைந்து
காதல் பயிர் விளைய
வேளாளனாவேன் - வேல்
ஆளனாய் காதல் பயிர் காப்பேன்.

என் பார்வை தண்டவாளப்பாதையில்
உன் புன்னகை புகைவண்டியில்
நான் பயணிக்க வா!?
தந்தி கம்பமாய் தனியே நிற்க வா.

## குமரன்விஜி

நினைவுகளின் கதவு திறந்ததும்
உலாவ வந்து விடுகிறது ஒரு பூனை
அது அறைகளின்
எல்லாப் பக்கங்களிலும் சுற்றி
மேசை மீது ஏறிப்பார்க்கிறது
ஏறும்போது
ஒரு வரலாற்று
இருட்டு அதன் காலில் அப்பிக் கொள்கிறது
அங்கிருந்து
பீரோவின் மீது தாவி நிற்கிறது
பொருளாதர ஆடையில்
தீப்பிடித்து
உயிர் தப்பித்ததே மேலென்று
ஒரு பக்கம் கருகி கிடந்த நினைவை
தொட்டுப் பார்க்கிறது பூனை
அங்கிருந்தும்
பரணுக்கு தாவுகிறது
பழைய கோப்புகள்
பூஞ்சை பூத்து மீண்டும்
மரமாக காத்திருக்கிறது
அங்கிருந்து
ஒரே தாவில்
கயிற்றில் தாவி வந்து
பார்த்தால்
ஒரு மூலையில்
மகிழ்ச்சியின்
சிறகுகள் உதிர்ந்து கிடக்கிறது
நேற்று கைக்கு சிக்காமல் போன
வண்ணத்துப்பூச்சியோ
என்று தொட்டுப் பார்க்கிறது பூனை
இறையாகும்
எலிகளை காணவில்லை
இறையாகிப்போனது
எறும்புகள் மட்டும்
யுகம் தளராமல்
தன் ஒற்றுமையை சாரை சாரையாய்
எழுதிக் கொண்டிருக்கிறது சுவரில்
எல்லாப்பக்கமும்
சுற்றி முடித்து
தரையில் வந்து
குட்டி கரணமிட்டு
மல்லாக்க படுத்து எழுந்து
சாவகாசமாய்
உலாத்தும் பூனை
வெளியேறும்போது காத்திருக்கிறது
வெறிகொண்டு ஒரு கால நாய்
வெறிகளை எதிர்கொள்ளாமல்
அங்கிருந்து நகரமுடியுமா
நினைவுகளும் பூனையும்.



# இதுதாண்டா காதல்

டே மச்சான் பிரியா உன்கிட்ட முக்கியமான விஷயம் பேசணும்னு கூப்பிட்டு இருக்கா போலிருக்கே என்னவா இருக்கும் யோசிச்சியா?

அட போடா இவ வேற என்ன சொல்லப்போறா?

வசந்த் நம்ம காதல் எங்க அம்மா,அப்பாவுக்கு தெரிஞ்சு போச்சு,என்னை உன் வீட்டு ஆளுங்களை கொண்டு வந்து முறைப்படி பொண்ணு கேட்டு கல்யாணம் பண்ணிக்கோன்னு மத்த பொண்ணுங்க மாதிரி கூவ போறா

இது எனக்கென்ன புதுசா,மத்த பொண்ணுங்களுக்கு டிமிக்கி கொடுத்து டாட்டா காட்டுன மாதிரி இவளுக்கும் டாட்டா காட்டிட்டு அல்வா கொடுத்திட்டு என் வேலைய பார்த்துக்கிட்டு போயிட வேண்டியது தான்.

டே மச்சான் பிரியா மத்த பொண்ணுங்க மாதிரி இல்லடா,உன் மேல ரொம்ப உசுரா இருக்கா,மத்த பொண்ணுங்க மாதிரி இந்த காதல் விஷயத்தை கேஷுவலா எடுத்துக்கிட்டு போவ மாட்டா..

கண்டிப்பா என்னை கல்யாணம் பண்ணிக்கோன்னு உனக்கு நிச்சயம் நெருக்கடி கொடுப்பா

அட போடா, எந்தெந்த விசயத்துக்கு எப்படி ரியாக்ட் பண்ணனும்னு எனக்கு தெரியும். நான் என்ன அவளோட ரூம் போட்டு மேட்டர் முடிச்சேனா.ஜஸ்ட் டைம் பாஸுக்கு லவ்வுன்னு பிட்டை போட்டேன்.மிஞ்சி மிஞ்சி போனா தியேட்டர் அழைச்சிட்டு போய் மேல கை போட்டு இருப்பேன். அவ கிஸ்ஸு அடிக்க கூட விடலை மச்சான்,எது செய்ய போனாலும் கல்யாணத்துக்கு அப்புறம்,அப்புறம்ன்னு செம சீன் போடுவா,இதுக்காக எல்லாம் நான் கல்யாணம் பண்ணனும்னா நானெல்லாம் எத்தனை கல்யாணம் பண்ணனும் மச்சான்.

டே வசந்த் எனக்கென்னவோ நீ தப்பு பண்ணுறியோன்னு தோணுது மச்சான்.ஒரு பொண்ணோட உடம்பை கெடுக்குறது மட்டும் பாவமல்ல,மனசை கெடுக்குறதும் பாவம் தான்.

டே,டே மச்சான் ஓவரா நீயும் சீன் போட்டு பேசாதே,நாமெல்லாம் அரிச்சந்திரன் வீட்டுக்கு பக்கத்துலயா குடி இருக்கோம்.இப்படி நல்லவன் மாதிரி பேசுறதுக்கு.நான் பார்த்துக்கிறேன்டா. அவகிட்ட எப்படி பேசணும்,எப்படி கழட்டி விடணும்னு எனக்கு தெரியும்.

நான் பார்த்துக்கிறேன் என்று சொல்லி பிரியாவை பார்க்க சென்றான் வசந்த்.

வசந்த் வீட்டுல ரொம்ப நெருக்கடி கொடுக்குறாங்க,படிச்சதெல்லாம் போதும் நீ நினைச்ச மாதிரியே றி.நி யும் முடிச்சிட்ட,இதுக்கப்புறமும் படிப்பு,படிப்புன்னு உன் கல்யாணத்தை தள்ளி போட வேணாம்மா, பொம்பள புள்ளைய வேலைக்கு அனுப்பி சாப்பிடுற எண்ணமும் எங்களுக்கு இல்லை.இப்போதைக்கு எங்களோட ஒரே கடமை உனக்கு நல்ல படியா கல்யாணம் பண்ணி வைக்குறதுன்னு சொல்றாங்கடா

டே வசந்த் உன்ன தாண்டா மலை போல நம்பி இருக்கேன்.உங்க அப்பா, அம்மா கிட்ட சொல்லி சம்மதம் வாங்கி முறைப்படி எங்க வீட்டுல வந்து பேசுடா..

இங்க பாரு பிரியா எங்க அப்பா ஹார்ட் பேஷண்ட்,நம்ம காதல் விஷயத்தை அவர் உடம்பு இருக்கிற இந்த நிலைமையில சொன்னா கண்டிப்பா அவருக்கு ஏதாவது ஆயிடும்.உனக்கு அவசரம்ன்னா உங்க வீட்டுல பார்க்கிற பையனை பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ,எந்த நிலைமையிலும் உன்னை வந்து டிஸ்டர்ப் பண்ண மாட்டேன்.எத்தனை லவ் பண்ணுற

காதலர்கள் நிஜ வாழ்க்கையில் சேர்ந்து இருக்காங்க சொல்லுங்க.இங்கே முக்கால்வாசி பேருடைய காதல் தோத்து தான் போகுது.இப்போதைக்கு நடக்காத விஷயத்துக்காக பீல் பண்ணி நம்ம குடும்பத்தோட நிலைமையை நாமளே சீரழிக்க வேண்டாம் பிரியா.

காதல் கல்யாணத்துல முடியனும்னு ஒன்னும் அவசியமில்லை..

நீ படிச்ச பொண்ணு பிராக்டிக்கலா முடிவு பண்ணு.

இங்க பாரு வசந்த்,உன்னை லவ் பண்ணும் போதே நீ தான் என் புருஷன்னு முடிவு பண்ணிட்டேன்.சில பொண்ணுங்க மாதிரி மனசை ஒருத்தன்கிட்டயும்,உடம்ப ஒருத்தன்கிட்டயும் கொடுக்க மாட்டேன்.என் மனசு,உடம்பு எல்லாமும் உனக்கு தான் சொந்தம்.நல்ல முடிவா சொல்லு.

உனக்காக இன்னும் ஒரு வாரம் காத்திருப்பேன்,சரியான முடிவை நீ சொல்லலைன்னா எனக்கான முடிவை நானே தேர்ந்தெடுத்துப்பேன்.

ஓகே வசந்த்..நீ நல்ல பதிலை சொல்லுவேன்னு நம்புறேன் என்று சொல்லி விட்டு சென்றாள் பிரியா.

ட்ரிங் ட்ரிங்

டே மச்சான் நான் தாண்டா வசந்த்,நான் நல்ல பதிலை சொல்லலேன்னா இவ தற்கொலை பண்ணிப்பாளாம் அதுவும் எனக்கு எந்த விதத்துலயும் கெட்ட பேர் வராத மாதிரி செத்து போவாளாம்.எவ்வளவு பேரை பார்த்திருப்பேன் மச்சான்.ஸிம்பதிக் ஏற்படுத்தி கல்யாணம் பண்ணலாம்னு நினைக்குறா சதிகாரி,என்கிட்டே நடக்குமா என்ன?

டே மச்சான் பாவம்டா அந்த பொண்ணு கல்யாணம் பண்ணிக்கோ,உன்னை உண்மையா லவ் பண்ணுறா அவளை கட்டிக்கிட்டா உன் வாழ்க்கை நல்லா இருக்கும்.

அப்போது அவன் அம்மாவிடம் இருந்து அழைப்பு வந்தது டே மச்சான் அம்மா போன் பண்றாங்க அவங்ககிட்ட பேசிட்டு அப்புறமா போன் செய்யுறேன் என்று சொல்லி நண்பனின் அழைப்பை கட் செய்து விட்டு அம்மாவின் தொலைபேசி அழைப்பை எடுத்தான்

அம்மா

டே வசந்த் அப்பா நெஞ்சை பிடிச்சுக்கிட்டு வலிக்குதுன்னு கத்திக்கிட்டே கீழே மயங்கி விழுந்துட்டாருடா,அவசரத்துக்கு பக்கத்து வீட்டு கேசவன் தம்பிய துணைக்கு அழைச்சுக்கிட்டு வந்து அன்பு ஹாஸ்பிட்டல்ல சேர்த்து இருக்கோம்ப்பா,நீ சீக்கிரம் ஹாஸ்பிட்டலுக்கு வாப்பா என்று சொல்லி அம்மா போனை வைத்தாள்.

பைக்கை ஸ்டார்ட் செய்து வேகமாக ஒரு வழியாக ஹாஸ்பிட்டலுக்கு வந்தடைந்தேன்

அம்மாவை அழுத கண்களோடு அந்த நிலையில் பார்க்கவும் மனசு ஒரு மாதிரி இருந்தது.

டே வசந்த் அப்பாவ போய் பாருடா,எப்ப பாரு துறு துறுன்னு இருந்த மனுஷன் இப்படி ஐ.சி.யு ல மூக்குல டியூப் சொருகி பார்க்கிறப்ப என் உசுரே நின்னு போற மாதிரி இருக்குடா,என் உசுர எடுத்துக்கிட்டாவது அந்த கண்ணு இல்லாத ஆண்டவன் அந்த மனுஷனுக்கு நீண்ட

ஆயுசை தரணும்.

அம்மா அழாதம்மா,அப்பாவுக்கு ஒண்ணும் ஆவாது.நான் போய் பார்த்திட்டு வர்றேன்.நீ முதல்ல போய் சாப்பிடு,ஏன்னா நீ பசி தாங்க மாட்ட

அந்த மனுஷன் இந்த நிலைமையில இருக்கிறப்ப எனக்கு சாப்பாடு ஒரு கேடு,அவரு நல்ல படியா எழுந்து வந்தா தான் இந்த தொண்டையில பச்சை தண்ணி கூட இறங்கும்.

சரிம்மா மனசை போட்டு குழப்பிக்காத அப்பாவுக்கு ஒண்ணும் ஆகாது.நான் போய் பார்த்திட்டு வந்திடுறேன்.நீ இங்கேயே இருன்னு சொல்லிட்டு மருத்துவரை பார்க்க சென்றான் வசந்த்

டாக்டர் எங்க அப்பா ராமசாமி எப்படி இருக்கார்.

மைல்டா அட்டாக் வந்து இருக்கு,வயசானவர்ல அதான் அவர் உடல்நிலை ரொம்ப வீக்காக்கி மயங்கி விழுந்து இருக்கார் இப்ப ஆபத்து கட்டத்தை எல்லாம் தாண்டி நல்ல இருக்கார்,இருந்தாலும் ரெண்டு நாளைக்கு அவர் ஐ.சி.யு ல தான் இருக்கணும்.கண் முழிச்சதும் போய் பாருங்க,நான் எழுதி கொடுக்கிற மாத்திரைய வேலாவேலைக்கு கொடுங்க என்று சொல்லி விட்டு டாக்டர் சென்றார்.

மருத்துவர் மற்றும் நர்ஸ் அனுமதியுடன் ஐ.சி.யு க்கு சென்றேன்.உள்ளே சென்ற நான் அப்பா என்றேன் என் குரல் கேட்டதும் கண் விழிக்க கூட தெம்பு இல்லாமல் ரொம்ப ஸ்ட்ரைன் செய்து கண் விழித்து பார்த்தார்.அந்த அரை குறை பார்வையிலும் ஒரு மூக்கில் டியூப் சொருக பட்ட நிலையிலும் குளறி,குளறி பேச தொடங்கினார்.

டே வசந்த் அம்மா பசி தாங்க மாட்டா,வேளாவேளைக்கு சாப்பிடலைன்னா அவளுக்கு மயக்கம் வேற வரும் லோ பிரஷர் வேற இருக்கு.முதல்ல அவளுக்கு சாப்பாட்டை வாங்கி கொடுத்து,அவள கூட இருந்து சாப்பிட வச்சு மாத்திரையை கொடுத்திட்டு வான்னு சொன்னார்.

அங்குள்ள நர்ஸ் சார் ரொம்ப ஸ்ட்ரைன் பண்ணி பேசாதீங்க, ப்ளீஸ் சீக்கிரம் இங்கேயிருந்து போங்க அவர் ஸ்ட்ரைன் பண்ணி பேசுன்னா அவர் உடல்நிலைக்கு ஆகாது என்று சொல்லி அவனை வெளியே அனுப்பினர்.

இந்த தள்ளாத வயதிலும் அப்பா,அம்மாவின் உணமையான காதலை உணர்ந்தான் வசந்த். இப்படி பட்ட அப்பா,அம்மாவுக்கு மகனாய் பிறந்த நாம் இப்படி செய்யலாமா என்று முதன் முதலாய் மனம் வருந்தினான்.

மூன்று தினங்களுக்கு பிறகு

ட்ரிங்..ட்ரிங்

ஹலோ பிரியா நான் வசந்த் பேசுறேன்..அப்பா,அம்மாவுக்கு நம்ம காதலை சொல்லிட்டேன் அவங்களும் ஓகே சொல்லிட்டாங்க.நாளைக்கு புதன் கிழமையாம், பொண்ணு கிடைச்சாலும் புதன் கிடைக்காதாம் ரொம்ப நல்ல நாள் வேறயாம் அதனால நாளைக்கு உன்னை பொண்ணு பார்க்க வர்றோம் உங்க வீட்டிலும் சொல்லிடுன்னு போனை வைத்தான்..



# மனோரஞ்சிதம்

ஆறாதபுண் ஒன்று சுண்டிச்சுண்டி வலிப்பதுபோல நெஞ்சுக்குள் வலித்துக்கொண்டிருந்தது சத்தியாவுக்கு. எங்கேயும் ஆற்றமுடியாத வலியாக அது பெருகிக்கொண்டிருந்தது. யாரிடமும் ஆற்றிக்கொள்ள முடியாதவளாய் மனிதர்கள் அலைந்து திரியும் தெருவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

மழை இலேசாகத்தூறி நிலத்தை நனைத்துக்கொண்டிருந்தது. நனைந்தபடியே சிலர் போவது தெரிந்தது. வெளியே மழைத்தூறல் இருந்தபோதும் அவள் உள்ளே அவிந்துகொண்டிருந்தாள்.

திரும்பத்திரும்ப மனோ அக்காவின் நினைவு எழுந்து மனதுக்குள் அழுத்தம் கொடுத்துக்கொண்டிருந்தது.

‘ ச்சீ.. ஒருநாளெண்டாலும் ஒருக்கா போன்எடுத்து.. சுகமா இருக்கிறியளோ எண்டு

கேட்டிருக்கலாம்.. ம்.. என்ர குரலைக்கேட்டால் எவ்வளவு சந்தோசப்பட்டிருப்பா.. '

நினைத்தபோது தன்மீதே எரிச்சல் ஏற்பட்டது சத்தியாவுக்கு.

மனோ அக்காவின் முழுப்பெயர் மனோரஞ்சிதம். எல்லோரும் மனோ என்றுதான் சொல்வார்கள். ஒருகாலத்தில் தன்னை ஆட்கொண்டு, பித்துப்பிடிக்க வைத்த மனோ அக்காவின் ஆளுமையை ஒருதரம் நினைத்துப் பார்த்தாள்.

மனோக்கா படித்த பெரிய கல்லூரியிலேயே சத்தியாவுக்கும் இடம்கிடைத்தது. முதல்நாள் மனோக்காதான் அவளை கல்லூரிக்கு அழைத்துச்சென்று, வகுப்பறையில் விட்டார்.

பாடசாலையால் வந்ததும் அவழை அழைத்து, பாடசாலையின் பட்டுணர்வுகளைக் கேட்டார் மனோக்கா. மனோக்காவின் ஆற்றல், நிமிர்ந்த நடை, மற்றவர்களுடன் அவர் பேசும் தொனி எல்லாமே சத்தியாவை கவர்ந்திருந்தன.

அவள் கல்லூரியில் சேர்ந்த முதல்வருடம், மனோக்காவுக்கு பேச்சுப்போட்டியில் தங்கப்பதக்கம் கிடைத்திருந்தது. அதையிட்டு கர்வம் கொள்ளாமல்,

' உமக்கும் ஒருநாள் இப்பிடிப் பரிசு கிடைக்கும் சத்தியா.. இப்பவே நல்லா முயற்சி செய்யவேணும்..' என அறிவுரை கூறினார்.

வீட்டில் கடைக்குட்டியான மனோ அக்காவிற்கு மேலே நான்கு மூத்தவர்கள். எல்லோருமே பெண்கள்தான். அவர்களின் வீட்டிற்கு பக்கத்தில் தான் சத்தியாவின் வீடு.

உறங்கும் நேரம் தவிர சத்தியா எப்போதும் அந்தவீட்டில்தான் இருப்பாள்.

அவர்கள் வீட்டின் முன் அகலக் கிளைபரப்பிநின்ற வெள்ளைக்கொழும்பான்

மாமரத்தின் கீழ், ஐந்துபேரும் வலைப்பந்து விளையாடுவார்கள். பந்து தூரப்போய் விழும்போது, சத்தியா ஓடிப்போய் அதை எடுத்துவந்து கொடுப்பாள்.

அந்த மாமரத்தின் கீழ் பந்தல்போட்டுத்தான் அந்த வீட்டின் நான்கு பெண்களுக்கு திருமணம் நடந்தது. அந்தத் திருமணக்காலங்களின் நினைவுகள் பசுமையாக சத்தியாவின் மனதில் தோன்றின. தாலிகட்டு முடிந்தவுடன் விருந்தினருக்கு கொடுக்கவென்று விசேடமா பெரியபெரிய தட்டுகளில் பழக்கேக் செய்வார்கள். அதன் சுவையை பின்னர் ஒருபோதும் சத்தியா அனுபவித்ததே இல்லை என நினைத்துக்கொண்டாள்.

அக்காக்கள் எல்லோரும் திருமணமாகிப்போய்விட, தனித்துப்போன மனோ அக்காவுக்கு சத்தியா தோழியாகினாள்.

எங்கே போனாலும் மனோக்கா சத்தியாவை தன்னோடு அழைத்துச்செல்வார். யாழ்ப்பாணத்து புடைவைக்கடைகளில் உடுப்புகள் வாங்கும்போது சத்தியாவுக்கும் வாங்கித் தருவார். றியோ ஐஸ்கிறீம் கடையில் கிண்ணத்தில் வரும் ஐஸ்கிறீமை முதல்முதல் வாங்கித் தந்தது மனோக்கா தான்.

அக்காக்களின் பிரிவு ஏற்படுத்திய துயரத்தோடு, அவர்களின் தகப்பனின் இழப்பும் சேரந்துகொண்டது. திடீரென வந்த இறப்பு அவருக்கு.

' அப்பா.. அப்பா.. ' என்று மனோக்கா அழுதபோதெல்லாம் சத்தியாவும் அடக்கமுடியாமல்

அழுதாள்.

இலங்கைக்கு இந்திய அமைதிப்படை வரும்போது, போரமைதியும் கூடவே வந்து சேர்ந்தது. அந்த அமைதிக்காலத்தில் வெளிநாட்டிலிருந்த பலர் தமது உறவுகளைக் காண ஊருக்கு வந்தனர்.

அப்படி வந்த ஒருவருக்கும் மனோக்காவிற்கும் திருமணம் பொருந்தியது. அக்காமார்கள் குடும்பம் குடும்பமாக வந்து திருமணத்தை நடத்தினர்.

' எனக்கு முதலிலை அந்தளைப் பிடிக்கேல்ல சத்தியா.. பிறகு பழகிப் பாக்க நல்லமாதிரி தெரியுது.. '

மனோக்காவின் கணவர் விடுமுறை முடித்து வெளிநாடு போய்விட்டார். தன்னை அழைப்பதற்கு அவரிடமிருந்து செய்தி வருமெனக் காத்திருந்து களைத்துப் போய்விட்டார் மனோக்கா.

இந்திய அமைதிப்படையின் முகத்திரை அகல அகல.. ஊரெல்லாம் இரத்த ஆறு. கண்முன்னே வீடுகள் சிதறின.

சனங்களெல்லாம் ஓடி ஊரக்கோயில்களிலும் பாடசாலைகளிலும் ஒதுங்கினார்கள். சுற்றிவளைப்புகள் தேடுதல்கள் என சனங்கள் அல்லோல கல்லோலப்பட்டார்கள்.

இந்திய அமைதிப்படை வீடுகளுக்குள் புகுந்து.. பெண்களையும் புசித்தது. தனியாக இருந்த மனோக்கா தன்னை அந்தப் பொது அவலத்திலிருந்து தன்னைப் பாதுகாக்க ஒரு வேடந்தரிக்கவேண்டி ஏற்பட்டது.

அவரின் அந்த வேடத்தைப் பார்த்த ஊரவர்கள் அவருக்கு வைத்த பட்டம்,

' விசரி '.

ஊரிலிருந்த அம்மன்கோயில் பொங்கல் அடுப்பின் சாம்பல் அவருக்கு முகப்பூச்சானது. கழுத்தில் பலநிறத்திலான நூல்மாலைகள். நெற்றியில் குங்குமப் பொட்டு. கையிலே ஒரு பழையபை.

சத்தியாவினால் அந்தக் கோலத்தை தாங்கிக்கொள்ள முடியவில்லை. மனதுக்குள் வெந்து வெதும்பிக் கொண்டிருந்தாள். மனோக்காவோ வீதிவீதியாக அலைந்துகொண்டிருந்தார்.

எப்போதாவது சத்தியாவின் வீட்டுக்கு வரும்போது, சத்தியாவின் அம்மா உணவேதும் கொடுப்பா. அவ்வளவு தான்.

சிலவேளைகளில் சில்லறைக் காசுகளைக் கொடுத்து, கடையில் ஏதாவது கேட்பார் மனோக்கா. சில கடைக்காரர்கள் காசு வாங்காமலே ஏதாவது உணவுகளையும், பழங்களையும் கொடுப்பார்கள்.

ஒருமுறை சத்தியா அம்மன் கோயிலடியில் மனோக்காவைப் பார்த்தாள். இளந்தென்னை தரங்கள் சூழ்ந்த, பஞ்செடிகள் நிறைந்த அந்தக் கோயில்வளாகம் சத்தியாவுக்கு மிகவும் பிடித்தது.

' இஞ்ச வாங்கோ தங்கச்சி.. '

சத்தியா அருகே போய்நின்றாள்.

‘ எல்லாரும் சொல்லுற மாதிரி நீங்களும் என்னை விசரியெண்டு நினைக்கிறியளோ..’

‘..’

‘ எங்களுக்கு சோறுபோட்ட.. எங்களை வாழவைச்ச வயலை வித்துத்தான் அந்தாளுக்கு சீதனக்காசு குடுத்தனாங்கள்.. அந்தாள் கழுத்தில தாலியைக்கட்டி.. காசை வாங்கிக்கொண்டு ஏமாத்திப்போட்டான்.. யாரிட்ட கேக்கிறது.. நான் இப்பிடித்தான் அலையவேண்டியிருக்கு.. தயவு செய்து நீங்களாவது வெளிநாட்டு கல்யாணத்தை நம்பி ஏமாந்திடாதேங்கோ.. அந்தளவுக்கு உங்களை இந்த அம்மாளாச்சி விடமாட்டா.. ‘

மனோக்கா அம்மாளாச்சியின் அடுப்புச் சாம்பலைக் கிள்ளி, சத்தியாவின் நெற்றியில் பூசி-விட்டார்.

இந்திய அமைதிப்படை கப்பலேறிய பின்னரும், ஓர் அமைதிக்காலம் வந்தது. எல்லா அமைதிக்காலமும் போரைப் புதுப்பிக்கப் போடப்படும் முன்நடவடிக்கை என்பதை சனங்களும் உணர்ந்துதான் இருந்தனர். ஆனாலும், அந்த அமைதியில் உறவுகளையும் வலிமைப்படுத்திக்கொண்டார்கள். மனோக்காவின் சகோதரி ஒருவர் ஊருக்கு வந்து, மனோக்காவை தம்மோடு அழைத்துச்சென்றுவிட, அயல்வீடு பற்றை படரத் தொடங்கியது.

உள்ளூரிலேயே அகதியான குடும்பமொன்று அந்த வீட்டிற்கு வந்துசேர்ந்தது.

மீண்டும் போரோசை எழுந்தது. மீண்டும் போர்க்கருவிகளின் முழக்கம். வானத்தை குண்டுகளை வீசும் வல்லூறுகள் தம்வசமாக்கின. இடப்பெயர்வாலும், அது ஏற்படுத்திய மனவுளைச்சலாலும் சத்தியாவின் தங்கை போராட்டத்தில் இணைந்துகொள்ளும் முடிவெடுத்துப் போய்விட்டாள்.

வீட்டில் யாருக்கும் ஒழுங்கான வேலையில்லை. வருமானமற்ற குடும்பத்தில் வறுமை தலைதூக்கத் தொடங்கிற்று.

ஒன்றாகப் படித்த காலத்தில் நல்ல நண்பனாக இருந்தவனே, தேடிவந்து சத்தியாவைத் திருமணம் செய்ய விரும்புவதாகச் சொன்னபோது.. சத்தியாவால் தட்டிக்கழிக்க இயலவில்லை.

திருமணஉறவில் இணைந்துகொண்டாள். எத்தனை புயல் அடித்தபோதும் வாழ்க்கை அவர்களுக்கு இனிப்பாகத்தான் இருந்தது. காலநகர்வில் நினைத்துப் பார்க்கவியலாப் புயல்கள் உருக்கொண்டன. இடம்பெயருவதே இயல்பு வாழ்க்கையாகிப் போயிற்று. ஆனாலும் இருவரும் கைகோர்த்துக் கம்பீரமாக நடந்தார்கள்.

காலம் இழுத்துச் சென்ற திசையெங்கும் பயணித்து, வலிகள் பட்டுணர்ந்து, மரணத்தின் கொடுவாயிலிருந்து பலமுறைகள் தப்பி மெல்லக் காலூன்றியிருக்கும் போதுதான் மனோக்காவின் செய்தி கிடைத்திருக்கிறது.

‘எத்தனையோ நட்புகளை.. உறவுகளை தேடித்தேடிப் புதுப்பித்த மனதில், ஏன் மனோக்காவின் நினைவு வராமல் போனது..?’ என நொந்துகொண்டது மனது.

காலம் தன்மனதில் ஏற்படுத்திய தழும்புகளில் ஒன்றாய் மனோரஞ்சிதத்தையும் பதித்துக்கொண்டாள் சத்தியா. அவளின் மனம் முழுவதும் மனோரஞ்சிதம் வியாபித்துக் கொண்டது.



# துறவு

*நான் யாழ்ப்பாணம் திருநெல்வேலி மதவடிச் சந்தியிலுள்ள சுருட்டுக் கொட்டிற் சொந்தக்காரரான சுப்பையாபிள்ளையின்ரை இளையமகன் சுந்தரலிங்கம். இப்பொழுது லண்டனில் வசிக்கின்றேன்.*

*மே18. எமக்குத்தந்த வலிமிகுந்ததும்.. இந்தநூற்றாண்டின் இணையில்லாத இனவதை*

நடந்ததுமான முள்ளிவாய்க்காலின் அழிவுகுறித்து இன்னுமோர் தீர்வு கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் எனக்குள்ளும் உண்டு.

சொந்தமண்ணில் தலைசாய்த்து நிம்மதியாகப் படுக்கவிடோமென்று விண்ணளாவிப் பறந்தும் கடலுலாவி நின்றும் நிலந்திரண்டு வந்தும்.. குண்டுகளைக் கொட்டிய பேரினவாத அரசின் கொடுமைகளைப் பொறுக்கமுடியாது பயந்து தாயகம்விட்டுத் தப்பியோடி வந்தவன் நான்.

போர்புகுந்து களங்களாடி வென்றவர் எம்மார் மிதித்த மண்ணைத் தொடக்கூட அருகதையற்றவன்யான்.. இன்று தொய்ந்த மனத்தோடு எழுந்து..

தலைமுழுகி நீருலர்த்தி.. வெள்ளை ஆடையுடுத்துச் சோகம்பூசிய முகத்தோடு வந்தேன்.

உப்புப் போடாத கஞ்சியை எனது மனைவியார் தந்தார். அது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் ஆத்மார்த்தமான இரங்கலுக்குரிய அடையாளமாகும்.

நான் ஆறுமுகம் வாத்தியாரின் தம்பிமாபைரப் பாரிஸ் நாட்டின் லாச்சப்பலிலுல்ள அவர்களின் கடைக்குச்சென்று சந்தித்துக் கதைத்ததால்.. வாத்தியாரும் அவரின் மனைவி பிள்ளைகள் எல்லோரும் முள்ளிவாய்க்காலில் நடந்த அரசின் அசுரமிகு அழிபிற் சிக்குண்டு.. தொலைந்து போனார்கள். என்ற துயர்படர்ந்த தகவலை அறிந்துகொண்டேன்.

ஆறுமுகம் ஆசிரியரை நான் தாயகத்திலுள்ள மல்லாவி என்னும் ஊரில் சதித்த வரலாற்றை. இத்தனை ஆண்டுகளைக் கடந்து இன்று எழுதுகின்றேன்.

தொன்நூற்றைந்தாம் ஆண்டு இலங்கையின் வடபகுதியில் நடைபெற்ற வரலாற்றுத் துயர்சூழ்ந்த இடப்பெயர்வால் நான் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குவந்து மல்லாவிக் கிராமத்தில் வாழ்ந்தபோது.. எனது முந்நாள் ஆசிரியர் ஆறுமுகம் அவர்களைச் சந்தித்தேன்.

ஐயா! மன்னிக்கவேணும். நான் சுந்தரலிங்கம். சென்ரற்கொலிச்சிலை படிச்சனான். அங்கை உங்களிட்டைக் கற்றுக்கொண்ட இங்கிலீசுதான் இண்டைக்கும் எனக்கு உதவுது.

நான் லண்டனிலை பஜோ இஞ்சினியராக உத்தியோகம் பாற்கின்றேன். என்று என்னை அறிமுகம் செய்துகொண்டேன்.

எடதம்பி! உன்ரை ஊரெவடம்.

என்ரையூர் திருநெல்வேலி.

விடுமுறைக்குத் தாயகத்துக்குவந்து.. என்ரை தங்கச்சி பரிமளத்தின் வீட்டிலை இருந்தனான். நால்லூர் முருகன் கோவிற் சூரன்போர்த்; திருவிழாவைப் பார்த்துவி;ட்டுப் போவமெண்டு தாமதித்ததாலை இந்தச்சிக்கலிலை மாட்டுப்பட்டிட்டன்.

என்ரை மனிசியும் பிள்ளைகளும் லண்டனிலை இருக்கீனம். அதுகளிப்ழி;பா இந்த இடப்பொயர்வுச் சங்கதிகளை அறிந்து என்னை நினைத்துக் கவலைப்படுங்கள்.

தங்கச்சி கந்தசஸ்ட்டி விரதமிருந்தவ. சூரன்போர்முடிந்து அடுத்தநாள் பாரணைக்குச் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கை.. குண்டுவீச்சுக்களும் அடிபாடுட்டுச் சத்தங்களும்

வெகுமும்முரமாகக் கேட்கத்தொடங்கவே..

ஊர்ச்சனங்கள்..

இஞ்சையும் ஆமிவருதாம்!..

என்று கூக்குரலிட்டவாறு.. வீடுகளைவிட்டுக் கிழம்பியோடவே.. நாங்களும் வெளிக்கிட்டனாங்கள். என்றுநான் கூறிமுடிக்குமுன் வாத்தியார் குறுக்கிட்டுக் கதைத்தார்.

எடதம்பி சுந்தரலிங்கம்! நாங்களும் இப்பிடித்தான் அந்தரப்பட்டு வெளிக்கிட்டுச் சனநெருக்கடிக்குள்ளை சிக்குண்டு.. ஆளுக்காள் இடிபட்டுப் போட்டிபோட்டு நடந்தனாங்கள்.

நள்ளிரவில் சாவகச்சேரியிச் சந்தியில் வந்;துதரித்து.. மறுநாள் கெற்பலி என்ற இடத்துக்குப் போனனாங்கள். அங்கை கண்டீரோ.. எனக்கு அறிமுகமான ஒருவரின்ரை வீட்டிலை நாங்கள் தங்கிக் கொஞ்சநாள் இருக்கைக்கை அங்கையும் ஆமிவருது என்ற அமளியெழவே.. பதறியடித்து வெளிக்கிட்டுக் கிழாலிக்கடலிலை தோணியிலையேறிப் பயணித்து.. பிறகு

கிளிநொச்சி.. வெள்ளாங்குளமெண்டு மாறிமாறியிருந்து. அலைந்து உலைந்து.. இப்ப மல்லாவியிலை வந்து ஓய்ந்திருக்கிறம்.

அதுதான் தம்பி நாங்களிருக்கிற வீடு. வாவன் போயிருந்து கதைப்பம்.

என்று மூச்செறிந்தவாறு கதைத்த வாத்தியாருடைய அழைப்பை மறுக்கமுடியாது அவரோடு சென்றேன்.

அந்தக் கொட்டில்வீட்டு மண்குந்தில் என்னை அமரவைத்தவர் தனது மனைவியாருக்கு என்னை அறிமுகம் செய்துவைத்தார்.

வயதுமீறிய தன்மையாலும் தனிமையின் தாக்கத்தாலும் பாதிக்கப்பட்ட அவர் அனுங்கியவாறு தொடர்ந்து கதைத்தபடியே இருந்தார். தனது வாழ்வில் கடந்துபோன சம்பவங்களை மீட்டிப்;பாற்பதில் அவர் ஆறுதலடைவதை உணர்ந்து நான் பொறுமையோடு அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

எடதம்பி சுந்தரலிங்கம்! எனக்குக்கண்டீரோ.. அப்பொழுது வயது பத்து. இலங்கையின் முதற் பிரதமமந்திரி டீ.எஸ். சேனநாயக்கா யாழ்ப்;;பாணம் கச்சேரிக்கு விஜயம்செய்திருந்தார்.

அவரை வரவேற்பதற்காகப் பாடசாலைப் பிள்ளை அழைத்துவந்து வீதியின் இருகரைகளிலும் நிறுத்திவைத்து கைகளில் பெரியதொரு வெள்ளைக் கொடிகளைத் தந்திருந்தார்கள்.

பிரதமர் குதிரையின்மேலே அமர்ந்தவாறு வந்தார். வரவேற்பு முடிவடைந்ததும் மாணவர்களை மீண்டும் பாடசாலைக்குக் கூட்டிச்சென்று அங்கே பாடங்களேதும் நடத்தாது வீடுகளுக்குச் செல்லுமாறு ஆசிரியர்கள் பணித்தார்கள். எமக்குக்கண்டீரோ.. அதுபெரிய சந்தோசம்.

எனக்குத்தந்த வெள்ளைக் கொடியை நான் பத்திரமாகக் கொண்டுவந்து அந்தக் கடதாசியை வெட்டியெடுத்து அதிலை நாலுமூலைப் பட்டங்கட்டி ஏற்றியதும்..

நண்பர்கள் அதைப்பார்த்;து மகிழ்ந்ததும்.. தாமும் அப்படிச் செய்திருக்கலாம் அனியாயமாகத் தங்களின்ரை கொடிகளைக் கிழித்து எறிந்து போட்டோமே.. என்று அவர்கள் வருந்தியதும்..

ஆறுமுகம் எப்பவும் திட்டமிட்டுச் செயலாற்றுபவன். என்று என்னைப் பாராட்டியதும். பெருமையாக இருந்தது. காரணம் ரிசுஸ்ப் பேப்பர் அந்தக்காலத்தில் எல்லாக்கடைகளிலும் இருக்காது. அதைக் கட்டாயம் வாங்கவேண்டுமானால் பெரியகடைக்குத்தான் போகவேணும்.

இப்படித்தம்பி எதையும் திட்டம்போட்டுச் செய்யிற என்னை இந்த இடப்பெயர்வு தடுமாறவைகிறது. எனக்கு என்ரை பிள்ளைகள்தான் இப்போது வழிகாட்டிகள். வயதுபோன காலத்திலை அதுதான்சரி.

என்ரையூர் தம்பி! நல்லூர். அங்கை செட்டித்தெரு வீதியில் எங்கடை பெரியவீடு இருக்கிறது. முன்னம் அந்த இடத்தில் கூரைமேய்ந்த மண்வீடுதான் இருந்தது. அதிலை எனது அப்பா அம்மா தம்பிமார் தங்கச்சி அம்மாச்சி அப்பு எல்லோரும் இருந்தனான்கள்.

நல்லூர் கோவில் வருடாந்தத் திருவிழா தொடங்கினால் தூரத்திலையிருக்கின்ற எங்கடை உறவினர்களும் வந்து எங்கடை வீட்டிலை தங்குவார்கள். எல்லோருக்கும் சேர்த்துப் பெரிய சமையல் நடக்கும். அது கண்டீரோ வலுசந்தோஸமான வாழ்க்கை.

றோட்டுக்கரையில் இருந்த வீட்டுவாசலில் சங்கடப் படலையிருந்தது. அதாவது காத்திரமான பலகையில் செய்யப்பட்டிருந்த படலையும்.. அதன் வெளிநுளைவாயிலின் இருரைகளிலும் சீமேந்தால் கட்டியதும்.. ஆட்கள் ஏறியமரக்கூடியதுமான உயரமான குந்துகளும் இருந்தன.

அவற்றைமூடிக் கிடுகுக் கொட்டகையும் போடப்பட்டிருந்தது. வழிப்போக்கர்கள் அந்தக் குந்தில்வந்து தங்கியிருந்து களைப்பாறிப் போகட்டுமே என்ற நல்லநோக்கத்தால் எங்கடை அப்பர் அதைநிறுவியவர்

வெகுபழைய காலமுதல் எங்கடை படலைக்கு அருகில் றோட்டோரமாகச் சுமைதாங்கித்தூண் இருக்கின்றது.

பாரத்தோடை போகின்ற சனங்கள் அந்தச் சுமைதாங்கிக் கட்டிடத்தில் அவற்றை இறக்கி வைத்துவிட்டு.. எங்கடை படலைக்குந்திலை வந்து இருந்து.. இளைப்பாறட்டும் என்று எங்கடை அப்பா நினைத்திருக்கலாம்.

தம்பி! முன்னம் எங்கடை நாட்டிலை இதுபோன்ற குந்துவைத்த படலைகள் நிறைய இருந்தன.

அதென்னசேர் சுமைதாங்கித்தூண். எனக்கு அது விளங்கவில்லை. என்று ஆவலோடு நான் வினாவவும்..

எமது மூதாதையர்களின் காலத்திலை கண்டீரோ.. மாட்டு வண்டில்களைத்தவிர மற்றைய வாகனவசதிகள் அவ்வளவு பெரிதாக இல்லை. சனங்கள் கால்நடையிலைதான் வெகுதூரம்வரை போக்குவரத்துச் செய்வார்கள்.

அவர்கள் காவிவரும் பாரமான பொதிகளையோ.. மற்றும் பொருட்களையோ இதிலிறக்கிவைக்கவும்.. பின்பு அவற்றைத் தூக்கிச்செல்லவும் இந்தத்தூண் உதவியாக இருந்தது.

அதுகண்டீரோ.. இரண்டு பக்கங்களிலும் குறைந்த உயரமும்.. நடுவில் கூடியஉயரமும் கொண்ட அகலமான கட்டிடவடிவம். வழிப்போக்கர்கள். காவிவரும் பாரமான சுமைகளை அதில் இறக்கிவைத்துவிட்டு.. ஓய்வெடுக்கும் நோக்கத்திற்காகக் கட்டப்பட்டது.

இதை வடமாகாணத்திலை பலபவிடங்களில் பிரதான றோட்டுக் கரைகளில் இன்றும் காணலாம்.

அற்புதமான தகவல்சேர்!.. எனக்கு ஞாபகம்வருகுது. ஒரு இடத்திலை அதைக் கண்டிருக்கிறன். பெரிய விளம்பரப் போஸ்டர்களை அதிலை ஒட்டியிருபார்கள். என்று நான்சொல்லவும்.

மாஸ்டர் உரத்துச் சிரித்துவிட்டுத்.. தனது கதையைத் தொடர்ந்தார்.

நாங்கள் வளர்ந்து இளந்தாரிகளானபிறகு.. என்ரை தம்பிமார் இருவரும் ஒருவர்பின் ஒருவராக பிரான்ஸ்சு நாட்டுக்குப் போட்டினம்.

அங்கை வலுகஸ்டங்களை அனுபவித்து அலைந்துதிரிந்து தொழில்களைத் தேடிச்செய்து சம்பாதித்த பணத்தைச் அவர்கள் சேமித்து.. அதை இஞ்சை அனுப்பியதாலை நாங்கள் எங்களின்ரை வழ்க்கை வசதிகளைப் பெருப்பித்துக் கொண்டோம்.

அவையள் இப்போது.. பிரான்சிலையுள்ள லாச்சப்பல் என்ற இடத்திலை சொந்தமாகப் பெரியதொரு பலசரக்குக் கடையை நடத்திவருகினம்.

நானும் மனிசியும் ஒருமுறை பிரான்சுக்குப் போய்வந்தனான்கள். அதுவலு சோக்கானவூர். அங்கை அவர்கள் நல்ல வசதியான வீடுகளிலை இருக்கினம். எனக்கு அதுகளைப்பார்க்க நல்லசந்தோஸமாய் இருந்தது தம்பி.

மூத்தசகோதரன் மட்டக்களப்புப் பெண்பிள்ளையை முடித்தவன். அவர்களுக்கு மூன்று பிள்ளைகளுண்டு. இளையவன் யாழ்ப்பாணப் பெண்ணை முடித்தவன். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள்தான்.

மன்னிக்கவேண்டுமையா நீங்கள் உங்களுக்கு எத்தினை பிள்ளைகளெண்டு சொல்லாமல் விட்டிட்டியள் என்றுநான் கேட்கவும்..

எனக்கு மூன்று பிள்ளைகள் கண்டீரோ. இரண்டுபெடியள் ஒரு பெண்பிள்ளை. மகன்மார் ரெண்டுபேரும் யாழ்ப்பாணம் கம்பஸ்சிலை சயன்ஸ் பிரிவிலை படித்தவன்கள். அவன்கள் தம்பி.. படிப்பைவிட்டிட்டு இயக்கத்திற்குப் போட்டான்கள்.

மகள் போராளியொருவரைக் காதலித்துக் கலியாணம் செய்தவள். அவளோடைதான் நாங்களும் வெளிக்கிட்டு இடம்பொயர்ந்து இங்கினை வந்தனான்கள். அவதான் இந்தக்கொட்டிலைக் கட்டிவித்து இங்கை எங்களை இருத்திருத்திப்போட்டு.. எங்கினையோ காட்டுப்பக்கத்திலை இப்ப சீவிக்கிறா.

அவவின்ரை புரிசன். அதாவது.. என்ரை மருமகன் சேரன் கண்டீரோ.. வலுநல்லபிளை. அடிக்கடி இஞ்சைவந்து எங்களைப் பார்த்துச் சுகம்விசாரித்துவிட்டுப் போவார். எங்களுக்குத் தேவையான சாமான்சக்கட்டு எல்லாம் அவர்தான் வாங்கித்தாறவர்.

எனக்குக்கண்டீரோ.. மலேரியாக் காய்ச்சல்வந்தது. நான் உங்கையுள்ள ஆஸ்பத்திரியிலை சிலநாட்கள் கிடந்தனான். மகள்தான் வந்து தாயாரோடு இருந்து என்னைக் கவனமாகப் பார்த்தவ. அவள் பாவம்தம்பி! கைக்குழந்தையோடை வந்து எங்ளோடை அலையிறாள்.

மாஸ்டர்! உங்கடை பெடியள் வாறதில்லையோ. அவர்களைப்பற்றி ஒன்றும் நீங்கள் சொல்வில்லையே என்று நான் வினாவவும்.

அவன்களும் வாறவன்கள். ஆனால்தம்பி.. அவையள் வலுதூரத்திலை இருக்கீனமாம். எங்கையிருந்தாலும் உயிருக்குப் பாதகமில்லாமல் இருந்தல்சரி. இங்கையும் இன்னும் எத்தைனை நாளைக்கு நாங்கள் இருக்கப்போகிறோமோ தெரியாது.

கதையோடை கதை சேர்! உங்கடை அப்பர் அம்மா இருக்கீனமோ என்னமாதிரி..

தம்பியின்ரை கேள்விக்கு எனக்குச் சிரிப்புத்தான் வருகுது. அதுகள் போய்ச்சேர்ந்து எத்தனையோ காலமாச்சு. இந்தக் கொட்டிலுக்கை கிடந்துகொண்டு எங்கடை பழைய வாழ்க்கையை நினைச்சுப்பார்ப்பன். கவலையாலை செஞ்சுமுட்டி நெடுமூந்சுவரும்.

எங்கடை வீடுகண்டீரோ.. பத்துப்பரப்புக் காணிக்குள்ளை அரன்மனைபோலை அமைந்திக்குது. அதை என்ரை தம்பிமார்தான் பிளான்போட்டுத் தங்கடை காசிலை கட்டினது. பழையவீட்டை இடித்துப்போட்டு அந்த இடத்திலைதான் இந்தப்புதுவீட்டை நீறுவினவை.

ஆறுபடுக்கையறை விசாலமான கோல். சகலமின்சார வசதியும் இணைக்கப்பட்ட குசினி. கக்கூசுகள் இரண்டு.. குளியலறையும் இரண்டுதான். உயரமான தூண்களிலை நிறுவிய பெரியதொரு தண்ணீரத்; தாங்கி..

முன்னுக்குப் பூந்தோட்டம். பின்வளவில் மாமரங்கள் பலாமரங்கள் வாழைகள். மரக்கறித்தோட்டம் எல்லாமுண்டு. எங்கடை வளவுகண்டீரோ சும்மா குளுகுளுவெண்டிருக்கும்.

ஓம்ராசா.. எல்லாச் சுகங்களையும் அனுபவித்து வாழ்ந்துவிட்டு.. முதல் அப்பா காலமாக.. பெரிவீட்டுப் பூரணம் என்று ஊரவர்களால் மதிப்போடு அழைக்கப்பட்ட எங்கடை அம்மா மகிழ்சியோடு இருந்தவ.. திடீரென மாரடைப்பால் போச்சேந்திட்டா.

சேர்! அந்தச் சங்கடப் படலைக்கு என்னவாச்சுது. அதையும் இடிச்சு அழிச்சுப்போட்டியளோ. என்று நான் கேட்டதும்..

சாச்சா! அது அப்படியே இருக்குது. நாங்கள் பெரியதொரு இரும்புக் கேற்றுப்போட்டுப் பிழங்கினனாங்கள். ஆனால் தம்பி! எங்கடை அப்பர்கண்டீரோ அந்தச்சங்கடப் படலையாலைதான் போய்வந்துகொண்டு இருந்தவர்.

அதற்கு மையடித்துப் புதுப்பிப்பம் எண்டு நாங்கள் முயன்றபோதெல்லாம் அப்பர் விடவில்லை. அதன் பழமை மதிப்புக்கெட்டுப்போம் என்று தடுத்துவி;ட்டார்.

என்ரை தங்கச்சி அரியமலரும் மச்சான் சின்னத்துரையும் அவையின்ரை பிள்ளைகளும் இடப்பெயர்வின்போது சாவகச்சேரி வரையும் வந்துவிட்டுத் திரும்பிப்போய் ஊரிலை அந்த வீட்டிலைதான் இருக்கீனம்.

அப்படியானால் ஐயா! நீங்களும் திரும்பிப்போய் அங்கைதான் இருப்பீர்கள். என்று நான்சொல்லவும் குறுக்கிட்ட அவரின் மனையியார்.. சற்றுக்கோபமாக..

இந்தாள் என்ன விசற்கதை கதைக்குது. என்ரை பிள்ளையள் நாட்டை மீட்கிறதுக்கு ஆமியோடை அடிபட்டுக்கொண்டு நிக்குதுகள். நாங்கள் அதுகளை விட்டிட்டுச் சுகசீவியம் நடத்திறத்துக்கு ஊருக்குப் போகலமே..

செருப்படிபேலை விழுந்த அந்த அம்மாவின் கேள்வியாலை நான் திணறிப்போனன். வாத்தியார் சிரித்துச் சமாளித்தவராக..

இவவுக்குப் பெயர்கண்டீரோ நாகம்மா. இது இப்படித்தான் சீறிச்சினக்கும். ஆனால் கொத்தாது.

என்றவர் சொல்லவும் அவவும்சேர்ந்து சிரத்தார். சிறிதுநேரத்தின்பின் சூடான கடலைப்பருப்பு வடைகளும்.. டின்பால் தேனீரும் கொண்டுவந்துதந்தார். சுவைத்துப் பருகியபடி தொடர்ந்து கதைத்தோம்.

என்னத்தைச்சொல்ல. எங்களுக்கெண்டு ஒரு நாடில்லாததாலை.. எதுவும் எமக்கு நிரந்தரம் என்று நம்பமுடியாது. எதிர்காலம் கண்டீரோ எனக்கு சூனியமாகத்தொரியுது.

தம்பி! இந்தவவுக்குள்ளை கனகொட்டில்கள் இருக்குது. குடிக்கவும் குளிக்கவும் இருப்பது ஒரு கிணறுதான். இயற்கைக் கடன்கழிக்க நிலத்தைத்தோண்டி அமைத்த தற்கலிகக் கழிவுக் கூடங்களும்.. இந்தவளவின் பின்பக்கமாகப் பற்றைக் காடுகளுமுண்டு.

வசதிகளையும் ஆசைகளையும் அள்ளியெறிந்துபோட்டு.. நாங்கள் வந்து வாழுகின்ற இந்த வாழ்கையிருக்கிறதே இதுதான் துறவு என்று சொல்லப்பட்டது.

பெருமூச்சுவிட்டுச் சோர்ந்துபோன வாத்தியார் சற்றுநேரம் ஓய்வெடுத்தபின்.

நீர்கண்டீரோ பரிசுக்குப் பேறநேரத்திலை என்ரை தம்பிமாரைப் போய்ச் சந்திக்கலாம். இதுதான் அவையின்ரை கடைவிளம்பரக்காட். கொண்டுபோங்கோ. என்றவர்தரவும்.. அதைப்பக்குவமாக வாங்கி எனது கைப்பைக்குள் வைத்துக்கொண்டு அவர்களிடம் கைகூப்பி விடைபெற்றுக் கிழம்பினேன்.

நான் லண்டனுக்கு எப்படியும் போகவேண்டும் எனமுயன்றேன். எனது தங்கையின் கணவர் தாண்டிக்குளம் வரையும் என்னைக் கொண்டுபோய் விடுவதற்கு ஒரு காரை ஒழுங்குபடுத்தினார்.

ஆறுமுகம் வாத்தியாரிடம் விடைபெறுவோம் என்றுநான் அவரின் கொட்டிலுக்குச் சென்றேன். ஆனால் அங்கு அவர்களில்லை. அதில் வேறுறொரு குடும்பத்தினர்கள் வசித்தனர். அவர்களிடம் விசாரித்தபோது..

அவர்களை மருமகனும் மகளும்வந்து வானிலைஏற்றிக் கூட்டிக்கொண்டு போட்டினம். இந்தவீட்டை எங்களுக்குத் தந்தவையள்.

என்ற தகவலை அவர்கள் நன்றியுணர்வோடு கூறினார்கள்.

**அகராதி**

நெருக்கமான உரையாடலின்
நீள் மூச்சிற்கிடையே
வந்து விழும் ஸ்மைலியின் பொருள்
துல்லியமாக இல்லையெனினும்
புறவடிவக் கோடாகவேனும்
புரியப் போவதில்லை.
பாலை மணல்
கொண்ட சுழிவில்
இறங்கும் மூச்சு நீரிறைக்க இல்லை

நினைவில் இருக்கிறாயென்று
சொல்லாமலேயே இருந்திருக்கலாம்.
நினைவாகவே இருக்கும் மூளை
சிம்மாசனம் விரும்பியதை
திரவக்கசிவுடன்
நரம்புகள் நடுங்க சிரித்துக் கொள்கிறது

திரவம் நிறம் மாறுகிறது

இருந்ததாக நம்பிய எதுவும் இல்லை.

---

**இல.கருப்பண்ணன்.சேலம்.**

ஒருபோத்தல்
மதுவை விட
சுரம் மிகுந்ததாக
இருக்கிறது
உன்
அழைப்போ
குறுஞ்செய்தியோ
என்னை ஆலிங்கனம்
கொள்ளும் அந்நொடி,
தீராப்போதையடி
என் கண்ணம்மா..

**பாரியன்பன் நாகராஜன்**

# நினைவலைத் தழும்புகள்

ஆழிக்குள் மூழ்கிய
நகரமாய்
நினைவலைகளின் தடங்கள்
அக்கணக்குகளின்
கணக்கை வைத்திருக்கிறது
காலம்.
உயிர்
நினைவில் வைத்திருப்பது
இரண்டாம் பட்சமே.

காட்டாற்று வெள்ளம்
சிற்றாற்று வெள்ளத்தை
கைப்பிடித்து
அழைத்துச் செல்வது போல்
நினைவுகளை
வேறொரு நினைவு
வேரறுக்க அழியும் தடம்.

இழந்ததையும் பெற்றதையும்
நினைவில் கொள்வது
காயமாறிய பின்னரும்
எஞ்சும் தழும்பைப்போல்.
வேறு காயத்தை இட்டு நிரப்பும்
புதிய தழும்பிற்கு
என்றென்றைக்கும்
இருந்து கொண்டிருக்கும்
காலம்..!

# இன்றைய இளையத் தலைமுறை!

பா.சிவகுமார்

தெருவோரக் குட்டிச்சுவர்கள்
யாருமின்றி
வெறிச்சோடி கிடக்கின்றன
வீட்டுச்சுவர் மூலையில்
முடங்கியவாறு
இன்றைய
இளையத் தலைமுறை
தனிமையில்
யாரையோ பப்ஜியில்
சுட்டுக் கொண்டிருக்கிறது

சீந்துவார் எவருமின்றி
மண்ணோடு மண்ணாக
புதைந்திருக்கின்றன
இளவட்டக்கற்கள்!
எரிவாயு உருளையைக்கூட
தூக்கமுடியாமல்
உருளையாய் இளவட்டங்கள்!

வாழ்த்தட்டைகளுக்கும்
ரோஜாப்பூக்களுக்கும்
'பழம்' என்ற விளியோடு
என்றோ மலர்வளையம்
வைக்கப்பட்டநிலையில்
டின்டரில் சாட் செய்து
பெஸ்டியுடன் ஊர்சுற்றி
ஓயோவில் ஒத்திகை பார்ப்பதே
இன்றைய ட்ரெண்டிங்!

சத்தான ஆகாரம் தின்று
உடலை முறுக்கேற்றியது
வழக்கொழிந்து
உணவு பக்கெட்டுக்குள்
தலை நுழைத்ததில்
எதேட்சதிகாரத்திற்கு
எதிராக வாய் திறக்கமுடியாமல்
இளையத் தலைமுறையின்
வாயிலை
அடைத்துக் கொண்டுள்ளன
பர்கரும், பிட்சாவும்!

மொழிப்போரில் உயிர்நீத்த
வரலாறு மறந்து
கல்லூரிப் பாடத்தில்
மொழியெதற்கு என
தாய்மொழி பற்றின்றி
பிறமொழிக்கு பல்லக்கு
தூக்கும் மொழியரசியல்
புரியாத புதிய தலைமுறை!

வாராத தலைமுடி;
மழிக்காத தாடி;
கிழிந்த ஆடை;
எப்பொழுதும் அலைபேசி தடவல்;
தலைகுனிவு வாழ்க்கை!

இவையெல்லாம்-
இளமைத் திருவிழாவில்
வாழ்வைத் தொலைத்த
இளைய சமுதாயத்தின்
சோக முகவரிகள்!

வாழ்வில் வெற்றி பெற்ற
இளைய தலைமுறையால்
வாசிக்கப்படாத
வாழ்க்கை பக்கங்கள்!

ஞா.முனிராஜ்

# துளிப்பாக்கள்

காகிதத்தாலும்
மானம் காக்கிறது
அரைகுறை சிலைக்கு..

❍

உருகி உருகிநீர்வடிக்கிறது
உள்ளங்கையில் அமர்ந்த
பனிக்கட்டி

❍

தாழ்வாரங்கள்
இசைமீட்டுகின்றன
அடைமழை

❍

திறக்காத தேநீர்கடையில்
கூட்டம்கூட்டமாய்
வந்துபோகும் எறும்புகள்

❍

முத்தம் கொடுத்ததால்
காற்று இளைத்துவிட்டது
சிரிக்கும் பூக்கள்

❍

வெட்டவெளியில்
குளிக்கும் மொட்டைமாடி
நீரூற்றும் மழை

❍

மண்ணின் வாசங்களை
அள்ளிப் போடுகிறது
தூரத்தில்பெய்யும்மழை

❍

குடைகள்
பேச ஆரம்பித்தன
மழைக்காலம்.

❍

துடுப்புகள்
உறங்குகின்றன
படகில் ஓட்டை

❍

அனுமதியின்றி
ஜன்னலைஎட்டிப்பார்க்கிறது
சாரல்மழை

❍

கல்லறையின்காலடியில்
கண்ணீர்பூக்கள்
மகனை இழந்த தாய்

❍


வண்ணத்துப்பூச்சிகள்
ஓய்வெடுக்கின்றன
வரைந்த ஓவியத்தில்..

❍

உளிகள் குத்தியதும்
கற்கள் பேசுகின்றன
சிரிக்கும் சிலைகளாய்

❍

விழுந்துகொண்டேதான்
இருக்கின்றன எழவேயில்லை
மழையின்வீழ் அருவி



**இனியவன் காளிதாஸ்.**

எல்லோரும் காய்ந்த
ரொட்டிக்கு
அலைந்து
கொண்டிருந்தார்கள்,
என் வீட்டில்
கறிசோறு இருந்தது.

எல்லோரும்
ஈர ஆடைகளை
திரும்பவும்
எடுத்தணிந்து
கொண்டார்கள்.,
என்வீட்டில்
புத்தாடைகள்
மீதமிருந்தன..


எல்லோரின்
குடிசைகளும்
மழைக்கு ஒழுகிக் கொண்டிருந்தன.,
எனதறையின்
குளிர்சாதனப் பெட்டியை
சரி செய்து கொண்டேன்.

என் வீடு
தீப்பற்றி
எரியத் தொடங்கியது.,
எல்லோரும்
குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள்.

**வெ.தமிழ்க்கனல்**

# ஒரு பிடி சாம்பல்

பகலின் மேனியில் தேமலாய்
படர்ந்து கொண்டிருந்த ஒரு காரிருளில்
கொடுந் தொற்றிடம் போரிட்டு
தனது இறுதி மூச்சைப் பறிகொடுத்திருந்த
ஒருவனது பிரேதத்தை
கோரப் பசியோடு அலைந்து கொண்டிருந்த
தீச்சுவாலைகளுக்கு உணவாக்கிக்
கொண்டிருந்தான்
அந்த வெட்டியான்.
வெகுநேர புசித்தலுக்குப் பின்னான களைப்பில்
நீடுதுயில் கண்ட தீச்சுவாலைகளோடு சேர்ந்து
மெல்ல மெல்ல தானும் உறங்கிப்போனான்.
விடியலை எதிர்நோக்கி
புள்ளினங்கள் கானமிசைத்த
அதிகாலைப் பொழுதில்
சோம்பல் முறித்தெழுந்து பார்த்தபோது
தங்களது பசிக்கு உணவளித்த
வெட்டியானின் நன்றிக் கடனுக்காக
ஒரு பிடி சாம்பலை பரிசளித்துவிட்டு
சென்றிருந்தன அந்த தீச்சுவாலைகள்.



**வீரசோழன்.க.சோ. திருமாவளவன்**

# ம்..!

என்னிதயங்கள் பழுதுபடும்போதெல்லாம்
நகத்துக்கு கலரடித்த உன் கால்கள்
மெதுவாய் இதயங்களை சீராட்டுகின்றன
கலர்களை விரும்பாத
பூமியில் நடக்கும் வானவில் நான்
என் அகங்காரத்தை நொறுக்கியது
உன் கால் விரல்கள்!
நெஞ்சத்து உராய்வெடுக்க
உன் கால்கள் மேனி படர்கையில்
மெதுவாய் சிணுங்குகிறது
இதயோசையை இயக்கும்
உனக்கும் கால்களுக்கும்
தசை மண்டலம் நரம்பு யாழ் மீட்டுகிறது
நேர் புவிநாட்டமாய் கால்கள்
இறங்கும்
ஆப்பிள்கள் வேலை செய்வதில்லை..
ஆதியிலே வார்த்தை இருந்தது
ம்!

**கயூரி புவிராசா**

மழைக்கால நீரில்
காகிதப்படகு செய்து குதூகலிக்கும்
இந்த குழந்தை மனதில் ஈரக்காலடி
பதிக்கும் உன் சாமர்த்தியங்களில்

ஏதோவொரு நட்சத்திரத்தின் ஒளிர்தல்
அசட்டுத்தனமாக நெக்குருகி
வியாபிக்க
பெருத்த சத்தத்துடன் கரையிலொரு
பேரலை
இரவின் சொட்டுக்களுக்குள் இறங்கி
கதகதப்பை பரவுகிறது

எது எப்படியாக இருந்தாலும்
பாதத்தை முத்தமிடும் மணல்
வீடுவரை வந்துவிடப்போவதில்லை
அறிவாயன்றோ..

இன்மைகளில் தான் இருப்புக்களின்
மிக மெல்லிய உயிர்த்தவிப்புக்
கணவலி கால் இடறும்.



**கயூரி புவிராசா**

அலைந்து கொண்டிருக்கும்
மறுப்பின்வெளியில்
தீராத காற்று
எந்த பற்றுதல்களுக்கும்
உட்படுவதில்லை

எரிந்து கொண்டிருக்கும் திரியின்
ஒளிப்பிரிகைக்கு நீ என்று
பெயர்
அது மாய தாகம்

திரண்டு சிவந்து எழும் தீயின்
கூந்தல் கோதி முடித்து உதிரம்
உருக்கும் அகாலங்கள்
அவை கணப்பொழுதில் மறையும்
கானலாகிய வானவில் நிறங்கள்

தன்னிச்சையாக உருவாக்கி கொண்ட
ஜன்னலோரங்கள்
கரைந்தழியும் நிமிடங்கள்

வானமும் கடலும் தழுவிக்கொள்ளும்
தங்க நிறப் பொழுதுகளில்
ஏகாந்தம் என் கால் நனைக்கும்

**கவிஜி**

# உடலில் காடு இருக்கிறது

உடலில் காடு இருக்கிறது
உண்மையில் அதி பயங்கரம் அது
இலை நுகரும் இசையும்
கிளை படரும் விசையும்
நரம்பூரும் நாட்டியங்கள்
ஒற்றையடி வெட்டும் பாதங்கள்
மகத்தான மண்வெட்டி
பற்களின் பளீரில் பச்சையம் மினுங்கும்
இச்சைக்கு மறுபெயர் என்கிறேன் அதை
எதிர்காற்றை மூச்சிரைக்கும்
இளம் நதிக்குள் குதித்துப் பார்க்கும் பேராசை
செடி கொடி என படரும் பூமாலை என
தொடரும்
தசையும் எலும்பும் யாம நீட்சி
பொன்வண்டு கூட்டமென
புதிர் தேடி அலையும் மனதின் பட்டாம்பூச்சி
ரெக்கை கட்டித் திரியும் எட்டுத் திசைக்கும்
மானுட இருள்வெறி
அருவம் அலையும் அடுக்குண்டு ஆழத்தில்
அரூபம் இசைக்கும் செதில் உண்டு தாகத்தில்
கொடூரம் ரெட்டைக் கண்களில் இருக்க
குரூரம் ஒற்றைக் கண்ணில் இருக்கிறது
மனிதன் கட்டியிருக்கும் கூட்டில்
மிருகத்தை
மடியில் கட்டிக் கொண்டலைகிறது காடு..!

# சிங்கத்தின் தற்கொலை

ஈழக்கவி

ராஜாவே
இந்தப் பாதகன்தான்
என்னை வழிமறித்தான்
என்றவாறு
குளத்தை காட்டியது முயல்
சிங்கம் நமட்டுச் சிரிப்புடன்
குளத்தைப் பார்க்கும் பாசாங்கில்
முயலின் குரல்வளையை
கடித்துக் குதறி
வனமெ அதிர
சின்ன முயலை தூக்கியடித்தது
சிங்கத்தின் கர்ஜிப்பும்
முயலின் இரத்தமும்
போரின் இறுதி கொடூரம் போல
அன்றுதான்
வெறும்ராஜாவான சிங்கம்
மகா ராஜா மகுடம்
சூடிக்கொண்டதை
வனமே கொண்டாடியது
சிம்மாசனத்தை அடையமுன்னே
மொத்த முயல்களின்
ஈரக்குலையையை
சுவிங்கம் போல
சப்பிச் சப்பி
பலூனாக ஊதி ஊதி
உடைத்து உடைத்து
ஆட்சியை ஆரம்பித்தது
அதிகாரமும்
ஆணவமும்
தலைக்கடித்தில்
கைகால் தெரியாமல்
கூத்தாடியது சிங்கம்
ஒரு வேளை உணவுக்காக
வனஜீவராசிகளில் இருந்து
ஒரு இனத்தை தேர்ந்தெடுத்து
மொத்தமாக கொல்லுதல்
வனச்சட்டமாயிற்று
முதல்நாள்
காலை தேனீருக்காக
வனத்திலுள்ள அத்தனை நாகங்களையும்
இரவிரவாக தேடிக்கொன்று
இரத்தத்தை வடித்தெடுத்தன
நரிகளும் பன்றிகளும்
காலை உணவு
முதலைகளின் மூளை
மருத்துவ ஆலோசனைப்படி
மரவேர் கஷாயம்
பத்துமணிக்கு
பகலுணவுக்காக
மொத்த யானைகளும் கொல்லப்பட்டு
அவற்றின் அங்தரங்க உறுப்புக்கள்
எருமையின் கொழுப்பில்
பொரித்தெடுக்கப்பட்டன
மாலை தேனீர்
புறா இரத்தம்
கடித்துக்கொள்ள
ஆமை வறுவல்
இராவுணவு
கழுகின் இதயம்
தவளை சூப்பு
ஒரு வருடமுடிவில்
வனம் வெறுமையாயிற்று
தன்னினத்தையும் தின்றாயிற்று
இறுதியில் கூடவே இருந்த
பன்றிகளாலும்
நரிகளாலும் பசியாறிற்று
மிஞ்சியது
உருக்குலைந்த சிங்கமும்
உடைந்த சிம்மாசனமும்
சிங்கம் முயல்காட்டிய குளத்தில் விழுந்து
தற்கொலை செய்துகொண்டதாக
கதையை முடித்தது
வனத்தின் பெருமூச்சு